
# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி



## மண்ணக விண்ணகத் தாயே வாழ்க !

## மண்ணகப் பெண்கள் உரிமைகள் ஓங்குக !

மே 2009

சமய - சமூக - இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20/=

# தொண்டன்


மே - 2009

மலர்- 41 இதழ்- 04


**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| தாயே | - | 02 |
| கதை ஒன்று கேட்போமா? | - | 03 |
| இலக்கிய மஞ்சரி | - | 05 |
| ஈழத்தை அழுந்த புனிதன் | - | 07 |
| காதற்ற ஊசிகள் | - | 09 |
| உங்கள் சுகமான வாழ்வுக்கு | - | 13 |
| ஈழத்துப்பூராடனார் | - | 14 |
| கடுகுக் கதை | - | 18 |
| நீதியற்ற நியதிகள் | - | 19 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 20 |
| மாணவர் பக்கம் | - | 22 |
| ரோமரும் கலையும் | - | 23 |
| காற்றில் கலந்துவரும் | : | 26 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 20/=
ஆண்டு சந்தா : 350/=
(தபாற்செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

ஆயுதப் புரட்சியல்ல மக்கள் புரட்சிதான் சக்தி வாய்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றை அலசுகின்ற வேளையில் சிறுபான்மையினரின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாமல் அசட்டை செய்யப்பட்டன. பலவித ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் கிழித்தெறியப்பட்டன. பாராளுமன்றத்தில் ஜனநாயக முறையிலான கோஷங்கள் கண்டுகொள்ளப்படவில்லை. அரசியல் சதுரங்க வியூகம் கையாளப்பட்ட வேளையில் அரசியல்வாதிகள் ஓரங்கட்டப்பட்டனர். இப்படியான சூழ்நிலையில் ஆயுதம் ஏந்தவேண்டிய கட்டாயத் தேவைக்குத் தள்ளப்பட்டது உண்மைதான்.

ஆயுதம் ஏந்திய போராட்டம் சூடுபிடித்த வேளையில் யார் முதல்வன் என்ற போட்டி உருப்பெற்றது. அதனால் சிறுசிறு குழுக்களாக போராட்டச் சக்தி சிதறுண்டது. இவ்வாறு சிதறுண்டதால் போராட்டத்திற்கு வலுக் குறைந்தது. இதனாலேயே காட்டிக் கொடுப்புகளும் துரோகங்களும் தாண்டவமாடின. தன்னையும், தன் சகாக்களையும் பாதுகாக்கவேண்டிய நிலை ஏற்பட, சுயநலவாதியாய் யாருக்கெதிராகப் போராட முனைந்தானோ அவனோடே உறவு கொண்டாடி குளிர்காய நேர்ந்தது.

இதன் விளைவு எதைக் கொணர்ந்தது? தன் இனத்தையே சூறையாடுவதுதான். அதுமட்டுமல்லாமல் பலாத்கார ஆட்சேர்ப்பும், கப்பம் கேட்டல், பாரிய வரி அறவீடு இப்படியாக பலவிதமான மனக்கசப்புகள். இறுதியில் மக்கள் போராட்டமாக அல்லாமல் ஒரு தனிப்பட்ட குழுவின் செயற்பாடாக விசுவரூபம் எடுத்தது.

மக்களின் தேவைக்காக மக்கள் முன்னெடுத்த போராட்டமாக இருந்திருந்தால், பலமான நிலையில் இருக்கும்போதே பலம்வாய்ந்த அரசியல் இராஜதந்திர வியூகத்தைக் கையாண்டிருக்கலாம். இன்று ஒரு பலம் வாய்ந்த நிலையில் பெரும்பான்மை அடக்குமுறைச் சக்தியோடு பேரம் பேச யாரும் இல்லாத நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற கதி கலக்கம் வாட்டி எடுக்கிறது, விசயம் தெரிந்த புத்திஜீவிகளை.

தன் பலத்தைத் தான் அறிந்திருக்க, வெளியுறவு ஆதரவை நாடி பிடித்துப் பார்த்திருக்க இப்படியான பாரிய அழிவைத் தவிர்த்திருக்கலாம் என்று சொல்லவேண்டியிருக்கிறது.

மக்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டியைக் கொடுத்து ஆசை காட்டி ஆட்சி பீடத்தைக் கைப்பற்றும் அயல்நாட்டு கபடநாடக அரங்கேற்றம் ஈழத் தமிழரை அம்போ என்று கைவிட்டதே ஒழிய, வேறு எதையும் சாதிக்கவில்லை.

போதும், எல்லாமே போதும். இனத்தையும், சொத்துகளையும் அழித்தொழித்தது போதும். மக்கள் சக்தி வெடிக்கட்டும், மக்கள் ஒருமித்த குரலாய் எழட்டும், ஒரு கொள்கைப் பிடிப்புக்காகப் போராடட்டும், வெற்றி நிச்சயம்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் 'மார்க்கோஸ்' நடாத்திய கொடூரத்தனமான, அரக்கத்தனமான ஆட்சிக்கு நிகழ்ந்ததுதான் இலங்கை நாட்டிலும் நடக்கவேண்டும். செபமாலையைக் கையில் ஏந்தி, கனரக ஆயுதங்களையும், போர்க் கருவிகளையும் கண்டு அஞ்சாமல் நடத்திய மக்கள் புரட்சி எழட்டும்.

வைகாசி மாதம் செபமாலை மாதம். அன்னை மரியாளின் துணை கொண்டு, செபத்தை மாலையாக்கி, கன்னி மரியாளைப் பெண்களுக்குள் ஆசி பெற்றவளாய் உருவாக்கிய இறைவனைப் புகழ்ந்து, அவர் துணைகொண்டு எமது உரிமைகளைப் பெற்றெடுப்போம். வன்னிப் போர்க்களத்தில் இரையாகிய அப்பாவி மக்களுக்காக, அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்காக, அகதி நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்காக செபிப்போம், உதவி புரிய முன்வருவோம்.

– ஆசிரியர்



## இறைவாக்கு

"உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்"

(லூக்கா: 1:53)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே...!



தாயே உன்னை
உறங்க வைப்பதற்காக
இந்தத் தாலாட்டு
தவம் கிடக்கிறது
நீயோ
தூக்கமின்றித் தவிக்கிறாய்

உன் சோகச்சுமைகளை
கொஞ்சமேனும் இறக்கிவை
அண்ணாந்து பார்
சிலுவையில் தனயன்
தரையிலே தாய்

தலை கொண்ட சுமையை
தளர்த்திக் கொள்வதற்கா
தணற்குச்சி எரிகிறது
இல்லையே
கோட்சே ஏவிய குண்டு
மகாத்மாவின் இதயத்தை மட்டுமே
துளைத்தது
அவர் இலட்சியத்தையல்லவே

உன் கணவனோ
நீ மார்பூட்டிய மைந்தனோ, மகளோ
உடன் பிறந்த சோதரனோ
அத்தனை பேருமோ
அவலமாய் மடிந்தார்கள்
இதில் ஆச்சரியமென்ன
நீ இலங்கைத் தாயல்லவா

இதழ்கள் உதிர்ந்த காம்பாக
இருட்டினில் கிடந்துகொண்டு
ஒளிப்பொட்டுக்காய் ஏங்குவதா
பூக்கள் உதிர்ந்துவிட்ட
பூமாலை நாராக நீ
வாழவும் முடியாமல்
சாகவும் வழியின்றி
அகதியாய்.. அநாதையாய்..

தாயே உன்னை
உறங்க வைப்பதற்காக
இந்தத் தாலாட்டு
தவம் கிடக்கிறது

- பைந்தமிழ்க் குமரன் தாவீது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை ஒன்று கேட்போமா...?

– ஜெ. சிதம்பரி –

# அழகை ரசி...



ஓர் அடர்ந்த காட்டில் முனிவர் ஒருவர் பர்ணசாலை அமைத்து வாழ்ந்து வந்தார். அவர்கூட ஒரு குரங்கும் சேர்ந்துகொண்டது. ஒரு நாள் முனிவர் குரங்கிடம் வாழைப் பழம் ஒன்றைக் கொடுத்து இதை உன் இரண்டு கைகளாலும் பிடித்துக்கொள். இதனைச் சாப்பிட்டுவிடாதே என்று கூறி குளிப்பதற்காக ஆற்றுக்குச் சென்றுவிட்டார்.

குரங்கு பழத்தைப் பார்த்தது. பார்ப்பதில் என்ன த்வறு இருக்கிறது. கண்களைப் பார்ப்பதற்குத்தானே கடவுள் படைத்திருக்கிறார் என்றெண்ணிக் கண்குளிரப் பார்த்தது. பின்பு அதன் மணம் எப்படி இருக்கும்? என யோசித்தது. முகர்ந்து பார்த்தது. பழத்தை உரித்துப் பார்ப்பதில் தப்பில்லையே என்று எண்ணி உரித்துப் பார்த்தது. வாயில் நீர் ஊறியது. இதை நான் சாப்பிட மாட்டேன். வாய்க்குள் பழத்தை அடக்கி வைத்துக்கொள்வேன் என்று எண்ணி வாய்க்குள் வைத்துக்கொண்டது. பின்னர் தன்னைக் கட்டுப்படுத்தவே முடியாத நிலையில் சாப்பிட்டுவிட்டது. ஐயையோ...! இப்போது முனிவர் வந்து கேட்டால் என்ன செய்வது என எண்ணிய குரங்கு இடத்தை விட்டு ஓடி ஒளிந்துகொண்டது.

இப்படித்தான் அனேகர் இதில் என்ன தப்பு இருக்கிறது என்றெண்ணி பாவ இச்சைகளுக்கு இடங் கொடுத்து மூழ்கி விடுகிறார்கள். தொலைக்காட்சி, கொம்பியூட்டர், இன்ரநெற் - ஆபாசப்படங்கள்... இப்படியே பாதை நீண்டு பாவக் கிடங்கில் விழுந்துவிடும். புனித பவுல் அடிகள் கூட எல்லாவற்றையும் செய்ய உரிமையுண்டு. ஆனால் எல்லாம் நன்மை தரக்கூடியவை அல்ல. எல்லாவற்றையும் செய்ய உரிமையுண்டு. ஆனால், எல்லாம் வளர்ச்சி தரக்கூடியவை அல்ல (1கொரி 10:23).

"அழகை ரசி அனுபவிக்க எண்ணாதே" இது உலக ஞானி பேணாட்ஷாவின் தத்துவம். இதனைப் பின்பற்றி அனேகர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சும்மா பார்ப்பதில் என்ன தவறு இருக்கிறது எனவும் கேட்கிறார்கள்.




**ஐந்து மணிக்குச் சும்மா சும்மா**
**அவளும் நானும் சும்மா சும்மா**
**பார்த்துச் சிரிச்சா சும்மா சும்மா**

என்ற சினிமாப் பாடல் வரிகள்கூட ஞாபகத்திற்கு வருகிறது. எல்லாமே சும்மா சும்மாதான்.

தொடக்க நூலில் ஏவாள்கூட பழத்தை இப்படித்தான் பார்த்திருப்பாள். விலக்கப்பட்ட கனியை அவள் பார்த்த பார்வை அவள் புத்தியைச் சலனப்படுத்தி சங்கடத்தில் மாட்டிவிட்டது. அதன் தோற்றம், அதன் அழகு அவளை வஞ்சித்துவிட்டது. ஒருவன்கடவுளின், ஆவியின் தரிசனத்தை இழக்கும்போது பாவ தோஷங்கள் யாவும் அவனுக்கு நன்மையாகவே தோன்றும். இஸ்ராயேல் மக்கள்கூட இனிமையான மன்னாவை வேண்டாமென ஒதுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்மட்டிக் காய்கள் மேலென நினைத்தார்கள். இதுதான் மனிதனின் சிந்தனை. மனிதனின் பாவங்களில் பெரும்பாலானவை கண்கள் மூலமாகவே ஆத்மாவினுள் பிரவேசிக்கின்றன. பிரகாசமான ஒளியில் கண்களுக்கு இன்பமூட்டி தன் வலையில் வீழ்த்த சாத்தான் எப்போதும் தயார் நிலையில் நிற்கிறான். அவனுக் கும் சகல அதிகாரங்களையும் கடவுள் கொடுத்தி ருக்கிறார். உடலை ஆட்டிப் படைக்கும் அலகை அவன். கடவுளையே சும்மா விட்டானா? எனவே, இவைகளில் கருத்தூன்றிச் செயற்படுவோம்.

**வாக்கினால் கண்ணால் கையால்**
**மனதினால் செய்த பாவம்**
**வாக்கினால் கண்ணால் கையால்**
**மனதினால் தீரவேண்டும்**
**வாக்கினால் கண்ணால் கையால்**
**மனதினால் தீராவிட்டால்**
**வாக்கினால் கண்ணால் கையால்**
**மனதினால் அழிந்து போகும்**

# திருச்செபமாலைப் புதுமை

– மற்றில்டா .R –



இது நடைபெற்றது ஹிரோஷிமாவில். 1945ம் வருடம் ஆவணித் திங்கள் ஆறாம் நாளன்று ஜப்பான் ஹிரோஷிமாவில் போடப்பட்ட குண்டு விழுந்த இடத்திற்கு ஏறக்குறைய ஒரு கிலோமீற்றர் தூரத்தில் ஓர் இல்லம் இருந்தது. அதனுடன் இணைந்திருந்த ஆலயம் பூரணமாக அழிந்தும், இந்த இல்லம் மட்டும் அழியாமல் இருந்தது. அவ்வில்லத்திலே ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த எட்டு இயேசுசபைக் குருக்கள் வசித்து வந்தனர். அங்கு தினமும் விசுவாசத்துடன் திருச் செபமாலையைச் செபித்து வந்தனர். இவர்கள் ஜப்பானிய மக்களுக்கு மறைபரப்பாளர்; இராணுவமல்லாதவர்; ஆனால், ஜெர்மனிய - ஜப்பான் நாட்டு அனுமதியுடன் 2ம் உலகப் போரின்போது ஜப்பானில் பணிபுரிய வந்தவர்கள். இவர்கள் சிறு காயங்களுடன் மட்டும் தப்பினர். அந்த நாளுக்குரிய கதிர்த்தாக்க நோய்களோ, கேட்கும் கோளாறுகளோ, சத்தங்களைக் கேட்காது போகும் நீண்டநாட் தாக்கங்களோ ஏற்படாமல் தப்பியது புதுமையாகக் காணப்பட்டது. பல தடவைகள் இவர்கள் பேட்டி காணப்பட்டனர். இவர்களில் ஒருவரான அருட்தந்தை ஷிபர், (இயேசு சபை அடிகள்) 200 தடவைகளுக்கு மேல் பேட்டி கொடுத்தார். விஞ்ஞானிகள், உடல்நல வல்லுனர் ஆகியோர் அனைத்தையும் ஆராய்ந்தறிந்தபின் குறிப்பிடத்தக்க அனுபவங்களைப் பெற்றனர். அருட்தந்தையர்கள் "நாம் புனித பாத்திமா அன்னையின் செய்தியுடன் வாழ்ந்துகொண்டிருந்ததால்தான் காப்பாற்றப்பட்டோம். நாம் ஒவ்வொரு நாளும் இவ்வில்லத்திலே திருச்செபமாலை செபித்தோம்" என்றனர். இத்தகைய விளக்கங்களைக் கேட்டு உண்மையில் விஞ்ஞானிகள் அதிசயமுற்று, பேச்சற்றுப் போயினர். அது ஓர் உண்மையானதும், அதிசயமானதுமான விளக்கமென ஏற்றுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பல ஒஸ்கார் விருதுகளைத் தட்டிச் சென்ற 'ஸ்லம்டோக் மில்லியனர்' என்னும் திரைப்படத்தினை சின்னத் திரையில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. தெளிவான பிரதியாக அது இருக்கவில்லை, எனினும் பார்த்தேயாகவேண்டும் என்ற தூண்டலில் அதனைப் பார்த்தோம்.

ஒரு சின்னக் கருத்தை அழகாகப் பின்னியெடுத்து கோர்வையாகத் தொடுத்து மனநிறைவாக வெளிப்படுத்தும் வண்ணமாகப் படமாக்கியிருந்தார்கள். சராசரி சேரிப்புறப் பையன் இரண்டு கோடி ரூபாவை எப்படி தொலைக்காட்சிப் போட்டியொன்றில் பெற்றுக்கொள்கின்றான் என்பதை விளக்கும் கதைதான் இப்படம். இதுவொரு பொது அறிவுப் போட்டி. கேட்கப்படும் சகல வினாக்களுக்கும் சரியாக விடையளிக்கின்றான் அப்பையன், என்றாலும் அவனுக்குப் பொது அறிவு என்பதே கிடையாது. இதனால் சந்தேகப்பட்டு, காவல் துறை அவனை விசாரிக்கின்றது. அதற்கு அவன் கொடுக்கும் விளக்கங்களும் பதில்களும் திரைப்படமாக விரிகின்றது.

உதாரணமாக ஒரு சம்பவத்தை எடுத்துப் பார்ப்போம். இப்பையனிடம் கேட்கப்படும் ஒரு கேள்வி: அமெரிக்க நூறு டொலர் நோட்டில் காணப்படும் படம் யாருடையது? நான்கு விடைகள் கொடுக்கின்றார்கள். 'பென்சமின் பிராங்கிளின்' என்ற சரியான விடையை அவன் சொல்லி பாராட்டுப் பெறுகின்றான். உண்மையில் இந்திய ரூபா நோட்டில் காந்தியின் படம் இருப்பதுகூட அவனுக்குத் தெரியாது. அப்படியானால் அவனுக்கு விடை எப்படித் தெரியும்? அது காட்சியாக விரிகின்றது. கலவரத்தில் பாதிக்கப்பட்டு தாயை இழந்து ஓடித் தப்பும் அச்சிறுவன் (ஜமீல்) 'தாஜ்மகால்' உள்ள இடத்திற்குச் சென்றடைகின்றான். 'தாஜ்மகாலைப்' பார்த்து 'எந்தப் பெரிய ஹொட்டல்!' என்று வாயைப் பிளக்கின்றான். உல்லாசப் பிரயாணிகளின் வழிகாட்டிகளைப் பார்க்கின்றான். அவனும் வழிகாட்டிபோல் காட்டிப் பிழைக்கின்றான். முதன்முதலில் ஒரு வயோதிப வெள்ளையின தம்பதிகளுக்கு 'தாஜ்மகாலினைச்' சுற்றிக்காட்ட முயற்சிக்கின்றான். ஒரு பெண் இறந்தமைக்காக இது கட்டப்பட்டது என்று அவன் விளக்குகின்றான். 'அவள் எப்படி இறந்தாள்?' என்று அவர்கள் வினவ 'வீதி விபத்தில் இறந்தாள்' எனப் பதில் கூறுவான். இவ்வாறு அவன் சம்பாதிக்கும் காலங்களில் டொலர் நோட்டுகளில் புழங்குகின்றான். அதன்போது தற்செயலாக ஒரு சம்பவத்தில் 'நூறு டொலர்' நோட்டில் 'பெஞ்சமின் பிராங்கிளின்' படம் உள்ளதென அறிகின்றான்.

இவ்வாறு அவனுக்கு விடை தெரிந்த கேள்விகள்தான் கேட்கப்படுகின்றன. காவல் துறை அவனை விடுவிக்கின்றது. இறுதிப் போட்டியில் அவன் பங்குபற்றி பரிசினை வெல்கின்றான். சுருக்கமாகச் சொல்லிவிட்டோம். முழுப்படத்தையும் பார்க்கும் போதுதான் இரசிக்கக் கூடியதாய் இருக்கும். 'நானும் கோடீஸ்வரன்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு இது வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் 'சத்தியஜித்ரே' அவர்கள் இந்தியாவின் ஒரு பக்கத்தை (வறுமையை) தனது திரைப்படங்களின் மூலம் வெளிக்காட்டினார்கள். இப்படமும் நாசுக்காக வறுமையின் பக்கத்தையும் சேரி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையையும் வெளிப்படுத்துகின்றது.

இத்திரைப்படம் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டிருப்பதால்தான் ஒஸ்கார் விருது பெற சிபாரிசு செய்யப்பட்டது. இதைவிடவும் சிறப்பான திரைப்படங்கள் பலவும் இந்தியப் பிராந்திய மொழிகளில் வெளிவந்திருக்கலாம்.




இத்திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் அவர்கள் இரண்டு 'ஒஸ்கார்' விருதுகளை வென்றுள்ளார். என்றாலும் மனிதர் 'கொம்பு முளைக்காமல்' அப்படியே அமைதியாக எளிமையாகக் காணப்படுகிறார். வேறு ஆளாக இருந்திருந்தால் 'வானத்திற்கும் பூமிக்கும்' எகிறிக் குதித்திருப்பார்கள்.

அவருக்கு தென்னிந்திய இசைத் துறையினரால் விருது வழங்கிய வைபவம் தனியார் அலைவரிசையில் ஒலிபரப்பானது. விழா மேடையில் அமர்ந்திருந்த இசை மேதைகள் அனைவருமே அடக்கமாக, எளிமையாகக் காணப்பட்டனர்; பேசினர்; பாராட்டினர்.

இதில் எம்மைக் கவர்ந்த விடயம் என்னவென்றால், ரகுமானைப் பாராட்டிப் பேசியவர்கள் அனைவரும் 'தமிழர் ஒருவர் விருதினைப் பெற்றுள்ளார்' என்றுதான் பேசினர். அப்துல் கலாம் அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது 'இந்திய ஜனாதிபதியாக தமிழர் ஒருவர் தெரிவு' என்றுதான் அனேக பத்திரிகைகள் தலைப்புச் செய்தி வெளியிட்டன.

அங்கு மொழியால் அனைவரும் தமிழர். மதத்தால்தான் இந்து, இஸ்லாமியர், கிறிஸ்தவர். அதற்கும் மேலாக இந்தியர் என்ற உணர்வு.

கிறிக்கட் போட்டிகளின்போது இந்தியர்கள் அனைவரும் இந்திய அணிக்கு ஆதரவு தருவார்கள். ஆனால், நம் நாட்டில்...?

இதில் இன்னொன்று, அவர்களின் தேசிய உணர்வுதான் - உணர்வின் காரணமாகத்தான் நமது பிரச்சினையின் தீர்வுகள் அதலபாதாளத்தில்....?

எல்லாவற்றையும் கடந்து அனைவரையும் பிணைத்து வைப்பதுதான் இலக்கியம். இதில் சினிமாவும் அடக்கம். அதுதான் என்னவோ முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பு 'சிறந்த மௌனத் திரைப்படம் ஒன்றைத் தயாரிப்பவர்களுக்கு ஒரு கோடி ரூபா பரிசு' என அறிவித்து இருந்தார்கள்.



## குறும்(புப்)பா - 16

வில்லெடுத்து வேலெடுத்து விழுப்புண் கண்டு
விலையில்லா உயிர்கொடுத்து வீரங்காட்ட
புல்லுருவிப் பூண்டெல்லாம் புதுவேடம் போட்டுவந்து
மல்லுக்கட்டி நிற்குதடா இழிந்து

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தை அளந்த புனிதன் (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்



2

செண்பகக்குழல்வாய்மொழி

## பிஞ்சில் பழுத்த ஞானம்

(வேறு)

தீவான ஈழத்தில்
தெரிவான யேசுமறை
நாவாட முடியாது
நசுங்குண்ட வேளையதில்
கோவாவில் கருவானான்
கொங்கணத்துக் கனவின்வித்து

தேனாற்றங் கரைமேவிச்
சதிராடும் தென்றலென
வானாற்றின் திசைநீளும்
வகைமீன்கள் வண்ணமென
ஊனாகி உரமாகி
உயிர்கொண்டான் மழலையென

விசுவாசம் நட்டவிதை
விளைந்தங்கு கடிநிலத்தில்
கசடற்ற முளையாகி
கனிவுற்று மரமாகி
காசினியில் பெயர்சூடக்
கமழ்ந்தவரோ யோசப்வாஸ்

ஊனத்துப் பாலோடு
ஊற்றான அமுதத்தின்
ஞானத்துப் பாலுண்டு
நலிவற்ற ஆன்மாவில்
வானத்துப் பிறையாக
வளர்கின்றார் யோசப்வாஸ்

ஆசார குடும்பத்தின்
அவர்தாமே உயிர்ப்பிம்பம்
பாசாங்கு இல்லாத
படிமத்துள் அவர்வாழ்வு
வீசாத புதுத்தென்றல்
விலையில்லாத் தனிவைரம்

கொங்கணி தாய்மொழியும்
கோவாவின் தனிமொழியும்
எங்ஙனம் இவைகற்றும்
இணையற்ற சுடரான
பங்கமில் லாஆன்ம
மொழிகற்றுப் பசித்திருந்தார்

பருவமோ சிறிதுமுற்றிப்
பழுத்தநல் லறிவுமின்னிக்
கருவிலே உற்றஞானம்
கடந்திட எல்லைஆன்ம
அருவியில் நனைந்தவரின்
இல்லமோ மூழ்கலாச்சு

கால்களோ நடந்தேகும்
காயுருட்டிச் செபமாலை
நூலிலே கோர்த்தெடுத்து
நினைவற்று நெடுந்தூரம்
ஞாலத்தில் அவருமன்றே
நலமிக்க புனிதனானார்

அன்பினைப் பெறவும்பெற்ற
அறமெனும் வழியில்நின்று
அதனையே தரவும்நம்மை
அனுப்பினார் தேவனென்று
சின்னவன் உரைத்தவாக்கு
சிந்தனைப் பொறியின்மூப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பலிக் குதவிமற்றும்
திருவினில் உயர்ந்ததாம்நற்
கருணையின் முன்னமர்ந்து
செபித்திடல் இவையிரண்டும்
கரும்பென அவரினித்துச்
சுவைத்தநற் காரியங்கள்

இரவிலும் எழுந்துளங்கோ
இடைக்கிடை நடந்துசெல்வார்
உரசிடும் இருளுமந்த
உத்தமன் முன்னொளிரும்
பரமனைத் தேடுவோர்க்குப்
பகைவெறுந் தூசுதானே

கோட்டாலிம் கதவுளந்தக்
கேள்வியு மற்றுவாசற்
பூட்டினைத் திறந்திரவில்
புதுமையாய்ப் பூட்டிக்கொள்ளும்
காட்சிநற் கருணைநாதர்
காணவே தொழுதுநிற்பார்

— வளரும் —




உள்ளே:

முழுப் பக்கம் - 2000.00

1/2 பக்கம் - 1250.00

1/4 பக்கம் - 750.00

அட்டை:

உள் பக்கம் - 3000.00

வெளிப்பக்கம் (பல நிறத்தில்) - 5000.00

வெளிப்பக்கம் (கறுப்பு வெள்ளை) - 4000.00

# இயேசுவின் திருநாமம்

இயேசுவின் திருநாமம் - இது
இதயத்தின் உயிர்நாதம்
பாவத்தின் இருள்போக்கி - நல்ல
பரிசுத்தம் தரும்நாமம்
(இயேசுவின்)

வாழ்வுக்கு உரமூட்டும் - எந்த
வயதிலும் வழிகாட்டும்
ஏழைகள் துயர்தன்னை - இது
இல்லாமல் துரத்திவிடும்
(இயேசுவின்)

பாவிகள் ஆனாலும் - அவர்
பாவத்தைப் போக்கிவிடும்
ஆவியின் ஆவியிது - நல்ல
அருளினைத் தருவதிது
(இயேசுவின்)

தொண்டுகள் புரிவோர்க்கு - நல்ல
துணையாய் நிற்பதிது
அன்றிருந் தின்றுவரை - எம்மை
அரவணைத் திருப்பதிது
(இயேசுவின்)

துன்பக் கடலலையில் - மூழ்கி
துவளும் மனிதர்களை
அன்புக் கரமீந்து - கரைக்கு
அழைத்து வருவதிது
(இயேசுவின்)


மண்டலம் முழுவதுமே - இது
மலைமேல் விளக்காகும்
தண்டனை தருவோர்க்கும் - நல்ல
தயவைக் கொடுப்பதிது
(இயேசுவின்)

இந்தநல் நாமத்தை - நமது
இதயத்தில் பதித்துவிட்டால்
சுந்தர வாழ்வுதரும் - நம்மை
சுவர்க்கத்தில் சேர்த்துவிடும்
(இயேசுவின்)

— முனாக்கானா —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணமகனும், மணமகளும் மணவறையை நோக்கி நடந்துகொண்டிருக்கிறார்கள். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அவர்களைப் பின்தொடர மண்டபமே ஒரே ஆரவாரமாகக் காட்சியளிக்கின்றது. ஆனால், சுமதியின் உள்ளம் மட்டும் பெரும் சுமையால் சுக்குநூறாக நொருங்கிக் கிடக்கிறது. சுமதிக்கு எவரைப் பார்த்தும் சிரிக்க மனம் வரவில்லை. ஒரு கதிரையில் போய் அமர்ந்து கொள்கிறாள்.

"இந்த மாப்பிள்ளையின் அருகில் இன்று மணமகளாக உண்மையில் அமரவேண்டியவள் நான்தான். ஆனால்....!"

சுமதி நீண்டதொரு பெருமூச்சை விடுகிறாள்.

"சுமதி அக்கா! இந்த சாறியில நீங்க நடிகை மாதிரி வடிவா இருக்கிறீங்க. உங்களுக்கு முப்பத்தெட்டு வயதெண்டு சொல்ல ஏலாது. இருபத்தேழு வயதுதான் மதிக்கலாம்.
முன்னால தெரியிற நரைக்குக் கொஞ்சம் டை பூசினா கடைசிவரையும் உங்கட வயதக் கண்டுபிடிக்கேலாது.
உங்களப் பாக்கத்தான் கலியாணப் பொம்புள போல இருக்கு"

வசந்தி கூறிய வார்த்தைகளைச் செவிமடுத்த சுமதி மௌனியானாள். மீண்டும் சுமதி அமைதியாகச் சிந்திக்க ஆரம்பித்தாள். மணமகளாகப் பெருமையுடனும், மனப் பூரிப்புடனும் சிரித்து மகிழ்ந்து ஆரவாரிக்கும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கை சுகந்தியைப் பார்க்கும்போது கோபம் கோபமாக வந்தது.

"என்னைப் பெண் பார்க்க வந்த எல்லோரும் சுகந்தியைத்தான் கேட்டார்கள். ஆனந்தன் மட்டுமென்ன விதிவிலக்கா..? ஆனந்தனும் சுகந்தியைத்தான் கேட்டார். தங்கை மீது எனக்குப் பொறாமை கிடையாது. ஆனால்......, எவரும் என் நிலையை நினைத்துப் பார்க்கவில்லை" சுமதி தன்னுள் வெதும்பினாள்.

"என்னைப் பெண்பார்க்க வரும்போது ஏன் சுகந்தியை முன்னுக்கு விடுவான்? வரவேண்டாம் என்று தடுத்திருந்தால் இன்று என் கழுத்தில்தானே தாலி ஏறியிருக்கும்..... அவளுக்கு இப்பத்தான் முப்பது வயது...."

மீண்டும் அவளது அங்கலாய்ப்பைத் தொடர்ந்து நீண்டதொரு பெருமூச்சு வெளியாகியது. தனக்குள் தானே போராடினாள்.

"ஆ..! சுமதி.. இநுக்குப் பிறகு உன்ர கல்யாணந்தான் பயப்படாத.." சின்னம்மா கூறுவது அவளுக்கு உறைத்தது.

"ஒண்டு போனாத்தான் எல்லாம் போகும்" சின்னம்மா மீண்டும் கூறியது காதில் பட்டது.

சுமதிக்குக் கரைசேராத இரண்டு தங்கைமார் இருக்கிறார்கள். அவர்களையும் ஒரு கணம் நினைத்துக்கொண்டாள் சுமதி. அழும் குழந்தை ஒன்றை ஆராட்டியவாறு அருகில் நின்றாள் சின்னம்மாவின் மகள் மாலினி. அவளுக்கு வயது இருபத்தாறுதான். இரண்டு பிள்ளைகளுக்குத் தாய். சுமதி ஒரு பட்டதாரிதான். வங்கி ஒன்றில் கடமையாற்றுகிறாள். மாதம் பதினெட்டாயிரம் வரை வருமானம் வரும்.

"எல்லோரும் சேர்ந்துதான் என்னை ஒதுக்கிவிட்டார்கள். எனக்குச் செய்யவேண்டிய நல்ல காரியத்தை ஒன்றுசேர்ந்து தங்கச்சிக்கே செய்கிறார்கள்...."

## மரியே வாழ்க



மனிதருள் மாணிக்கமே
மக்களின் காவலியே
மாசின்றிப் பிறந்திட்ட
மகிமைநிறை தாயேநீ

எழுதுகின்றேன் உம் மகிமையம்மா
எண்ணில் அடங்கா உம் தாழ்ச்சியையே
எழில் பொங்கும் உம் முகம் அம்மா
எம்மையே என்றும் நீ காத்திடுவாய்

வரங்களைக் கேட்ட உடன் தந்திடுவாய்
வாடியோரை என்றும் அரவணைப்பாய்
வளங்களை என்றும் பொழிந்திடுவாய்
வாழியவே உம் புகழ் என்றும் அம்மா

**- சுகுணா அன்ரன் -**

என்று எண்ணிய சுமதி அவ்விடத்தில் இருக்கவும் பிடிக்காமல் மெதுவாக எழுந்து நடந்தாள். அவள் மனம் போராடிய வண்ணமே இருந்தது.

தந்தை பேசிக்கொண்டிருப்பது காதில் பட்டது.

"மூத்தவள் சுமதியப் பற்றித்தான் எனக்குக் கவல.... வயதும் போகுது... கெதியா ஒரு நல்ல இடமாப் பாக்கோணும்..."

"என்ன குடுப்பியள்...?" தரகரின் கேள்வியிது.

"வீடும், போடப்பட்ட நகையும், பத்து இலச்சம் காசும்"

சுமதி இவ்வுரையாடலையும் கடந்து செல்கிறாள்.

"சுமதி அக்கா..! எப்ப எங்களுக்கு விருந்து போடுவியள்?"

அதற்கொரு மௌனப் புன்னகையை உதிர்த்தவள் மேலே நடக்கிறாள். சுமதியின் மாமிமார் தர்க்கிப்பது காதுகளைத் துளைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் முந்தியே சொன்னன்தானே.. சுகந்திதான் முதல் முடிப்பாளெண்டு. சுமதிய விடச் சுகந்தி கவர்ச்சி கண்டியோ. அதோட இளமையுங்கூட"

"வயது போச்சுதெண்டா மாப்பிள தேடக் கஷ்டம் கண்டியோ..?"

"எத்தின குமர்கள் இப்பிடிக் கரசேராமக் கிடக்குதுகள்..?"

"அடுத்தது எலும்பு முத்தினா புள்ளப் பெற்றதும் கஷ்டம் கண்டியோ..."

இவ்விவாதத்தை மென்றுகொண்டே மெல்ல நடக்கிறாள் சுமதி.

கல்யாண ஆரவாரங்கள் ஓய்ந்து சுமதி வேலைக்குச் சென்றபோது அங்கே....

"என்ன சுமதி..! நீ கோட்ட விட்டிட்டாய் போலக் கிடக்கு. தங்கச்சி கெட்டிக்காரி. காரியத்தச் சாதிச்சிட்டாள்"

"எப்பயாம் உமக்கு வெடிங்...?"

"சும்மா நாள இழுக்காதேயும். வயசு போனா எல்லாம் கஷ்டம்தான். இளம திரும்பி வராது"

நண்பியர்களின் வினாக்களுக்கு மௌனப் புன்னகையால் விடை கொடுத்தாள் சுமதி. அவளுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சோக கீதமாக உதிர்ந்தது. எல்லாவற்றையும் மனதில் போட்டு அரைத்தாள்.

அன்று சுமதியைப் பெண்பார்க்க வருகிறார்களாம். அரைநாள் லீவு போட்டவள் வீடு செல்கிறாள். போக வெளிக்கிட்டவளை காரியாலய நண்பர்கள் பகிடி பண்ணினார்கள்.

"சுமதி இதையும் கோட்டை விட்டுப் போடாதே.."

"தங்கச்சி மாதிரி நீயும் பத்து மாதத்தில புள்ளையும் பெத்துக் காட்டு"

"நல்லா மேக்கப் பண்ணிக்கோ"

"மேக்கப் சென்ரரில ரூத்தவுசனப் பாக்கமா (2000) மேக்கப் போட்டுக்கோ"

"மௌனமா இருக்காம கலகலப்பா இரு என்ன..?"

நண்பர்களது பகிடியான ஆலோசனைகளில் அலைமோதியபடி வீட்டை அடைந்தாள் சுமதி. நப்பாசையில் இருந்த சுமதிக்கு இன்றும் ஒரு நரக நச்சரிப்பாகவே அமைந்தது. சுமதியின் அடுத்த தங்கை மிதுனாவை மணம் முடிக்க நாள் வைத்துவிட்டுச் சென்றார்கள் மாப்பிள்ளை வீட்டார்.

மனச்சுமையுடன் காரியாலயம் வந்த சுமதியைக் கண்டு அனைவரும் பரிதாபப்பட்டார்கள். சுமதியுடன் வேலை செய்யும் தில்லைநாதன் சுமதியைத் தனியாகச் சந்தித்து

"சுமதி..! நான் ஐந்து வருடமா உங்கட விருப்பத்தக் கேக்கிறன். நீங்க ஒரு முடிவுமே சொல்ல இல்ல...

உங்களிலும் நான் எட்டு வயது இளமையெண்டு பயப்படுறீங்க அப்படித்தானே..?

தாஜ்மகாலைக் கட்டின சாஜகான் மும்தாஜைவிட பதினைந்து வருடம் இளமையானவர்தான். அவர்கள் காதல் கருகியா போய்விட்டது.

நீங்க ஓம் எண்டால் நாளைக்கே றெஜிஸ்டர் பண்ணலாம்"

தில்லைநாதனின் கேள்விக்கு முன் பல கேள்விகள் சுமதியின் முன் தோன்றியது.

"தில்லைநாதன் எட்டு வயது இளமையானவர்... ஆனாலும் தோற்றத்தில் ஒன்றும் சளைத்தவரல்ல. சாதி.....? 'லோகாஸ்ட்' எண்டு அம்மாவும்... அப்பாவும்... ஏன் இந்தச் சமூகமே சுட்டிக் காட்டும்...."

ஆழமாகச் சிந்தித்தாள். என்ன நினைத்தாளோ...

"இன்று வேலைவிட்டுப் போகுமுன் பதில் தாறன்" என்றவள் மௌனமாகவே நடக்கிறாள்.

"என்னை நானே ஏமாற்றுகிறேனா...?" சுமதியின் கேள்வியிது.

மாறுபட்ட மதிப்பீடுகள் செய்யும் சமூகத்தின் முன் சுமதி சுதந்திரமற்றவளாகத் தவித்தாள். அவளது வயது அவளைப் பார்த்து எக்காளம் இட்டுச் சிரித்தது. ஒவ்வொருவரும் பேசும் பேச்சுகள் அவளை உலுப்பி எடுத்தன.

"எனது முடிவை நான் எடுக்க ஏன் பிறரது அபிப்பிராயம்?" தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள்.

"அப்படியானால் காலம் பூராகவும் நான் தனிமரமா..? என்னை உண்மையாகவே அன்பு செய்பவர் யார்...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமதி தனது முடிவை
தில்லைநாதனிடம்
கூறியபோது தில்லைநாதன்
எதிர்பார்க்கவேயில்லை இப்படி
ஒரு பதில் வருமென்று.

அன்று சுமதியும்
தில்லைநாதனும் சினிமாத்
தியேட்டருக்குப்
புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.
வழியில் சுமதியின் சின்னம்மா
எதிர்கொண்டாள்.

"சுமதி..!
இஞ்சகொஞ்சம் வா!"
என்றாள். சுமதி அருகில்
சென்றபோது....
"சுமதி..! என்ன உன்ர
இஷ்டத்துக்கு மாப்பிள
எடுத்திட்டாய்..? எல்லாரும்
என்ன சொல்லுயினம்
தெரியுமா..? மாப்பிள எட்டு
வயது இளமையாம்
'லோகாஸ்டாம்' "

"சரி சின்னம்மா
படத்துக்கு நேரமாகுது நான்
வாறன்" அவள் பயணம்
தொடர்கிறது.

அவள் உள்மனம்
மட்டும் உரைத்தது...

" 'காதற்ற ஊசிகள்'
அவர்கள். தைப்பதற்கு
இலாயக்கற்றவர்கள்.
எதையாவது
பேசிக்கொண்டேயிருக்கட்டும்.
தமது ஆசை தீரப் பேசட்டும்"

# துணை நீயே தாயே

மானிட மைந்தனைத் தாரணி மீதினில்
தண்ணொளிபோல் தந்துவிட்ட தவமரியே
அன்புருவே அழகு நிறை முழு நிலவே
வந்தனை செய்கின்றோம் வான்மதியே மாதாவே

தேனமுதை ஈந்த தேன்கூடே நீ வாழ்க!
தெவிட்டாது உன் புகழ் செபமாலைத் தாயே
அருள்நிறை மரியே அகல் விளக்கே
அண்டி வந்தோம் எமக்கு அருள் தாரும் அம்மா

அனுதினமும் ஐம்பத்துமூன்று மணிச்செபம்
அனுஷ்டித்துச் சொல்லிவர அடைவோமே நற்பலனை
அமலமரியே ஆரோக்கிய மாதாவே
ஆறுதல் அளிப்பாய் அடிபணிந்தோம் மாதாவே

துன்பங்கள் சூழ்ந்திடவே துவண்டு நிற்கும் வேளையிலே
தூண்போல் நின்று துணைபுரியும் தாயவளே
பரிசுத்த கன்னியே பார்போற்றும் மாதாவே
பாரினில் இருந்து பரலோகம் ஏகினாயே

விண்ணவர்க்கு அரசியே எம் விடியல் நட்சத்திரமே
விலையில்லாப் பெட்டகமே விசுவாசப் பேழையே
சாந்தமுள்ள தாயே சமாதான இராக்கினியே - உனைச்
சரணம் என்று ஓடிவந்தோம் சாந்தி தருவாய் தாயே

- திருமதி. அன்னமலர் அழகரெத்தினம் -

அவள் சந்தோசமாகக் கணவனுடன் விரைகிறாள்......

அவள் சுதந்திரம் அவள் கையில். அவள்
யாருக்கும் தடையில்லையே......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## சூரிய நமஸ்காரம்



### நிலை - 02

• முன்னோக்கி வளைந்து கால்களை மடக்காமல் கால் விரல்களைத் தொடவும்.

• நெற்றியால் முழங்கால்களைத் தொட முயற்சிக்கவும்.

• இவ்வாறு செய்யும்போது மூச்சை நன்கு வெளியே விடுங்கள்.

• இது பாதஹஸ்தாசன நிலையாகும்.



### நிலை - 03

• உள்ளங்கைகளைத் தரையில் ஊன்றி, வலது காலைப் பின்நோக்கிக் கொண்டுவரவும்.

• இடதுகால் முட்டியை படத்தில் காட்டியதுபோல் மடக்கவும்.

• கைகள் இரண்டும் தரையைத் தொட்டபடி இருக்கவேண்டும்.

• இது ஓட்டப் பந்தயத்துக்குத் தயாராக நிற்கும் நிலையாகும்.


• இவ்வாறு செய்யும்போது மூச்சை உள்ளிழுத்த வண்ணம் செய்யவும்.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு கலாசாரப் பேரவை வருடந்தோறும் மட்டக்களப்பு அறிஞர்கள், கலைஞர்கள், பல துறைகளிலும் சாதனை புரிந்தவர்களை வருடம் தோறும் பாராட்டி விருந்தளித்து வருவதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். இந்த வழக்காறு 1984ம் ஆண்டில் முதன் முதல் அப்போது அரசாங்க அதிபராக இருந்த திரு. எம். அந்தோனிப்பிள்ளை அவர்கள் காலத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இற்றைவரை மட்டக்களப்பு மண்ணின் மைந்தர்கள் பலர் பாராட்டப்பட்டுள்ளனர். இந்த வகையில் முதன் முதல் பாராட்டி இலக்கியமணி என்ற விருதைப்பெற்றவர் திரு.க.த.செல்வராச கோபால் (ஈழத்துப்பூராடனார்) அவர்களாவார்.

# ஈழத்துப்பூராடனார்

அதே வருடம் அவர் கனடாவிற்குப் புலம் பெயர்ந்து அங்கே வாழ்கின்றார். அங்கே அவர் வாழ்கின்றார் என்பதிலும் பார்க்கத் தமிழ்ப்பணி, தமிழ் மொழிப்பணி, இலக்கியப் பணி, சமயப்பணி செய்துகொண்டே தமது காலத்தைத் தமிழிற்காகச் செலவிட்டு வருகிறார். இது வரை 250 நூல்களைப்படைத்து இலங்கையிலும், கனடாவிலும், கடல் கடந்த நாடுகளிலும் பல விருதுகள், பாராட்டுகளைப் பெற்றுள்ளார். அவற்றுள் 57 நூல்கள் மட்டக்களப்பைப் பற்றியன. அவரை இப்போது தமிழகம் புரிந்துகொண்டு அவர் வாழ்க்கை வரலாறு, தமிழ்ப்பணி பற்றி கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. அது மட்டுமல்ல அவருடைய தமிழ்ப்பணியை கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் ஏற்றுப் பாராட்டி 2000 இல் கலாநிதிப்பட்டத்தையும் வழங்கி கௌரவித்துள்ளது. இப்போது தமிழ் பத்திரிகைகள் இவருக்குத் தக்க கௌரவம் கொடுக்கப்பட வேண்டுமென தமிழக மாநில அரசு, இந்திய மத்திய அரசு என்பனவற்றின் கவனத்திக்கு எடுத்துக்காட்டத் தொடங்கியுள்ளன.

கடல் கடந்து இத்தகைய தமிழ் செய்யும் மட்டக்களப்பு மண்ணின் மைந்தன் ஒருவரைப்பற்றி தமிழகப் பத்திரிக்கை எழுதியுள்ள ஒரு கட்டுரை.

கனடாவில் இன்று வாழும் ஈழத்துப்பூராடனார் தமிழீழத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைச் சார்ந்த செட்டிபாளையம் எனும் ஊரில் வாழ்ந்த நாகமுத்து சாமுவேல் கதிர்காமத்தம்பிக்கும் வள்ளியம்மை அம்மாளுக்கும் மகனாக 13.12.1928 இல் பிறந்தவர். இவர் தம் இயற்பெயர் செல்வராசகோபால் ஆகும். செட்டிபாளையம் எனும் ஊரில் பிறந்தாலும் தேற்றாத்தீவில் வாழ்ந்தவர். இவர் தொடக்கக் கல்வியைக் குருக்கள் மடம் மெதடிஸ்த மிசன் தமிழ்ப் பாடசாலையிலும் உயர் கல்வியினை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், மருதானை கலைநுட்பக் கல்லூரியிலும், குடந்தையிலும் (தமிழகம்) பயின்றவர். ஈழத்தில் தம் ஆசிரியர் பணியை முப்பத்தைந்து ஆண்டுகள் செய்து 1985ம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

இப்பொழுது கனடாவில் தம் குடும்பத்தினருடன் வாழ்ந்துவரும் ஈழத்துப் பூராடனார்க்கு அகவை எண்பதைக் கடக்கிறது. தள்ளாத அகவையிலும் தமிழ்ப்பணிபுரிவதில் சோர்வின்றிக் காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப்பூராடனாரின் குடும்பம் தமிழறிவு பெற்ற குடும்பமாகும். இவரின் பாட்டனார் புலவர் இ.வ கணபதிப்பிள்ளை, பெரியதந்தை வரகவி சின்னவப் புலவர், கலாநிதி ஏ.பெரியதம்பிப் பிள்ளைப் பண்டிதர் முதலானவர்கள் வழியாக இவருக்கு தமிழறிவும் தமிழுணர்வும் கிடைத்தன.

ஈழத்துப்பூராடனார் தமக்கு பதினேழு அகவை இருக்கும்பொழுது பாடல் வரைந்து அதனை வீரகேசரி இதழில் (1945 சனவரி) வெளிவரச்செய்தார். அதனைக் கண்ட புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை ஈழத்துப்பூராடனாரை அழைத்து எழுத்துத் துறையில் ஊக்கப்படுத்தினார். அதன் பிறகு ஆசிரியப்பயிற்சி மாணவராக இருந்தபொழுது இலங்கையிலிருந்து வெளிவந்த தினகரன், வீரகேசரி, சுதந்திரன், ஈழகேசரி, மின்னொளி, சிறீலங்கா முதலான ஏடுகளுக்கு எழுதி கதை, கட்டுரைகள், தொடர்கள் வெளிவந்தன. அதுபோல் தமிழகத்திலிருந்து வெளிவந்த தமிழன், கல்கி, திங்கள், ஆனந்தவிகடன், கலைமகள் போன்ற ஏடுகளிலும் எழுதினார்.

ஈழத்துப்பூராடனார் ஈழத்தில் வாழ்ந்தபொழுது இவர்தம் தமிழ்ப்பற்று அறிந்த அரசினர், இவர்தம் ஈழத்துப்பூராடனார் என்னும் புனைப்பெயரில் அமைந்திருந்த ஈழமெனும் சொல்லைப் பயன்படுத்தக்கூடாது எனக் கண்டித்தனர். (1979 முதல் அரசினர் ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்தியவர்களைக் கண்காணிக்கத் தொடங்கியமையை நினைவிற் கொள்க)




ஈழத்துப்பூராடனார் 1985ல் கனடாவிற்குக் குடும்பத்துடன் குடி பெயர்ந்தார். அங்கு சென்றபிறகு தமிழர்கள் பலரும் ஈழத்திலிருந்து குடிபெயர்ந்து அந்நாட்டில் வாழத் துணையாக இருந்தார். தமிழ் மக்கள் பயன்பெறும் வண்ணம் பல்வேறு நிறுவனங்களை ஏற்படுத்திப் பல பணிகளையும் செய்தார். அவற்றுள் ரிப்ளக்சு அச்சகம், சீவா பதிப்பகம், நிழல் எனும் பெயரில் இதழ் நடத்தியது, தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டமை, உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - கிளை ஏற்படுத்தியமை, இவர்தம் மகன் சார்ச் இதயராச் அவர்கள் வழியாகத் தமிழ் மகன் எனும் திரைப்படம் உருவாக்கியமை, தம் மக்களுடன் இணைந்து தமிழ்க் கணிப்பொறி எழுத்துக்களைப் பயன்படுத்தி முதன் முதல் தமிழ் நூல் வெளியிட்டமை (பெத்லகேம் கலம்பகம்) (1986) முதலியன இவர்தம் பணிகளுள் குறிப்பிடத்தக்கன.

ஈழத்துப்பூராடனார் இளம் அகவையிலே எழுதத் தொடங்கி விட்டார். தம் பெயரிலும், கதிர், கதிர்வள்ளிச்செல்வன், பூராடனார், ஈழத்துப்பூராடனார் எனும் பெயர்களிலும் பல்வேறு கதை, கட்டுரை, திறனாய்வு, கவிதை, மொழிபெயர்ப்புகள் எனப் படைத்துள்ளார்.

ஈழத்துப்பூராடனார் பிறமொழி அறிவின் துணைகொண்டு பல நூல்களைத் தமிழுக்கு மொழி பெயர்த்துள்ளார். இவற்றுள் ஆங்கிலத்திலிருந்து புகழ் மிக்க கிரேக்க காவியங்களான இலியட், ஒடிசியை மொழி பெயர்த்தமை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு மொழி பெயர்த்த பொழுது கிரேக்க நூல்களின் மூலநூலைத் தழுவித் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப மொழிபெயர்ப்பைச் செய்துள்ளார். கோமரின் இலியட் காவியம் 2400 வெண்பாக்களாகவும், ஒடிசி காவியம் 2400 விருத்தப்பாவாகவும் (1990) படைக்கப்பட்டுள்ளன. மேலும் கிரேக்க நாடகங்கள் பல பன்னிரண்டு தொகுதிகளாகவும் இவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றுள் சொபிக்கொலசின், ஆயிலாசியாசின் நாடகங்கள் குறிப்பிடத்தக்க பெருமைக்கு உரியன.

ஈழத்துப்பூராடனார் கூத்தர் வெண்பா (821 செய்யுள்), கூத்தர் அகவல், நாடகத்தமிழ், மணிமேகலை (தென்மோடி), சிலப்பதிகாரம் (வடமோடிக்கூத்து), கனடா குறவஞ்சி நாடகம், கிழக்கு ஈழமரபுவழி இருபாங்குக் கூத்துக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கான தகவற் திரட்டு முதலான நூல்களை இயற்றியுள்ளார். மேலும் பிற எழுத்தாளர்களுடன் இணைந்து பல நூல்களை நாடகத்துறையில் உருவாக்கியுள்ளார்.

ஈழத்துப்பூராடனாரின் தமிழழகி காப்பியம் எனும் நூல் ஒன்பது காண்டங்களாக 12000 செய்யுள்களைக்கொண்டு படைக்கப்பட்டுள்ளது. தமிழரின் மொழி, கலை, பண்பாடு, இனம், வரலாறு, இலக்கம், இலக்கியம் பற்றிய பல தகவல்களைக் கொண்டு இந்நூல் உள்ளது. ஒவ்வொரு காண்டமும் 300 பக்கங்களைக் கொண்டது. ஈழத்துப்பூராடனார் ஈழத்தின் வரலாற்றை அறிவதற்கு பயன்படும் வண்ணம் யாரிந்த வேடர்(1965), ஈழத்தின் வரலாறு (1986) எனும் நூல்களை எழுதியுள்ளார். ஈழத்துப்பூராடனார் உரைநடை எழுதுவதில் வல்லவர் என்பதுபோல் பிற நூல்களுக்கு உரை வரைவதிலும் வல்லவர். அவ்வகையில் இவர் சீமந்தனி புராணம் (வித்துவான் பூபாலப்பிள்ளை) கதிர்காம சதகம் (இ.வ. கணபதிப்பிள்ளை) முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

ஈழத்துப்பூராடனார் பனை ஓலைகளிலிருந்து சில நூல்களை அச்சில் பதித்துள்ளார். அவற்றுள் கபோதகாதை (1970) இரண்யசம்கார அம்மானை (1966) குறிப்பிடத்தக்கன. ஈழத்துப்பூராடனார் சிற்றிலக்கியங்கள் பலவற்றை இயற்றியுள்ளார். புயற்பரணி எனும் பெயரில் 625 செய்யுள் கொண்ட நூலையும், ஈழத்துப் போர்ப்பரணி எனும் பெயரில் 525 செய்யுள் கொண்ட நூலையும் இயற்றியுள்ளார். இவை தவிர வறுமைப் போர்ப்பரணி எனும் நூலையும் இயற்றியுள்ளார். விபுலாநந்தர் பிள்ளைத்தமிழ் (1984) ஈழத்து இரட்டையர் இரட்டை மணிமாலை (1984), புலவர்மணிக்கோவை (1984) முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

ஈழத்துப்பூராடனார் எழுதிய நுல்களுள் அறிஞர் உலகம் ஏற்றுப்போற்றும் நூல்கள் அவர் மட்டக்களப்பு தொடர்பில் இயற்றப்பட்டவை எனில் மிகையன்று. ஏனெனில் இந்நூல்கள் மட்டக்களப்பு வரலாறு அறிவிப்பதோடு அமையாமல் அங்கு வழக்கிலிருக்கும் பழந்தமிழ் சொற்கள், வாழ்க்கை முறைகள், பண்பாடு என பல்துறைப் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் அந்நூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வகையில் 1.மட்டக்களப்பு பிரதேசத்தின் வழக்கு மரபுச்சொற்கள் சொற்றொடரினதும் அகராதி (1984) 2.மட்டக்களப்பு மாநிலப்பழமொழிகள் அகவரிசை (1984) 3.நீரரர் நிகண்டு (1984), 4.மட்டக்களப்புச் சொல்வெட்டு (1984), 5.மட்டக்களப்புச் சொல்நூல் (1984), 6.மட்டக்களப்பு மாநில உபகதைகள் (1982), 7.சீவபுராணம் நெடுங்கதை (1979), 8.மட்டக்களப்பு மக்களின் மகிழ்வுப் புதையல்கள் (1978), 9.மட்டக்களப்புப் பனையோலைச் சுவடிகள் (1980), 10.மட்டக்களப்பியல், 11.மட்டக்களப்பு உழவர் மாட்சிக் கலம்பகம் 12.கன்னங்குடா உழுதொழிற்பள்ளு, 13.மீன்பாடும் தேன்நாடு, 14.வசந்தன்கூத்து ஒருநோக்கு, 15.வயலும் வாரியும்,

## சிந்தனைக்காக சில துளிகள்

– வயலற் சந்திரசேகரம் –

- வாடிய நாரில் வாடாத மலரைத் தொடுக்கும் சமுதாயம் வாடாத நாரில் வாடிய மலரைத் தொடுப்பதில்லையே.
- உனது நம்பிக்கையைப் பணத்தில் வைக்காதே. பணத்தை நம்பிக்கையான இடத்தில் வை.
- சுமைதாங்கியாக இரு, சுமை இழுக்கும் கழுதையாகாதே.
- பாசமாக இரு, அதற்காக அனைத்தையும் பறி கொடுக்காதே.
- ஏணியாக இருந்து ஏமாறாதே. ஏறிச் செல்பவனாக இரு. ஏணியை யாரும் ஏற்றிவிடமாட்டார்கள்.
- நம்பிக்கையை முதலில் உன்னிடம் வை. சாதனை சதிராடும்
- மாபெரும் சக்தி உனக்குள் உண்டு. கண்டுபிடித்தால் நீதான் திறமைசாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.மட்டக்களப்பில் இருபாங்குக் கூத்துக்கலை முதலியன குறிப்பிடத்தக்கன.




ஈழத்துப்பூராடனார் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுபவர். இச்சமயம் சார்ந்து பல நூல்களை இயற்றியுள்ளார். இவர்தம் வாழ்க்கைமுறை என்பது அனைத்துச்சமயத்தாரையும் ஆரத் தழுவிப் போற்றும் வகையினது. இவர் கணிப்பொறி வழி அச்சிட்ட முதல்நூல் பெத்லகேம் கலம்பகம் (1986) கிறிஸ்தவ சமயம் சார்ந்த நூலாக இருப்பினும் சைவ சமயம் சார்ந்த பல நூல்களுக்கு உரை வரைந்துள்ளார். இவர்தம் தமிழ்ப்பணியைப் போற்றி இஸ்லாமிய சமையம் சார்ந்த பெரியவர்கள் பாராட்டுசெய்துள்ளனர். இவரின் வினைப்பாடுகளும் வெளிப்பாடுகளும் தமிழ் தமிழர் நலம்சார்ந்து அமைந்தது.

ஈழத்துப்பூராடனார் தன்னலங் கருதாமல் தமிழ் நலம் கருதிச் செயற்பட்டமையால் இவர் தம் பணியைப்பாராட்டிப் பல்வேறு அமைப்பினரும், நிறுவனங்களும் பாராட்டிச் சிறப்புச் செய்துள்ளன. இவற்றுள் இந்து பண்பாட்டு அமைச்சின் நாடக சேவை விருது (1982), மட்டக்களப்பு கலை பண்பாட்டு அவை வழங்கிய இலக்கியமணி விருது, கனடாவில் வழங்கப்பட்ட பாராட்டுப்பதக்கம், (1994) தொரன்றோ சேக்கம் நிறுவனத்தின் கேடயமும் (1987), மொரிசியசில் வழங்கப்பட்ட தமிழ் நெறிப்புலவர் விருதும். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் இவர்தம் தமிழ் இலக்கியப் பணியைப் பாராட்டி வழங்கிய முனைவர் பட்டமும் (docter of literature) (2000), தமிழர் தகவல் விருது (1992), தமோதரம் பிள்ளை விருது (1998) முதலியன குறிப்பிடத்தக்கன.

ஒரு மாந்தன் இல்வாழ்க்கையிலும், இலக்கிய உலகிலும் இணைந்து வெற்றிபெறுவது அரிதாகவே நிகழும். அத்தகைய அரிய வாழ்க்கை ஈழத்துப்பூராடனாருக்கு அமைந்துள்ளதைப் பெருமையோடு சுட்டிச்சொல்லவேண்டும். அவர்தம் அருமை மனைவியார் வியற்றிஸ் பசுபதியவர்கள் தமிழ் பயிற்றுவித்தலில் நல்ல பட்டறிவுடையவர். ஈழத்துப்பூராடனாரின் மக்கட் செல்வங்கள் அச்சுத்துறையிலும், கணினித்துறையிலும், வல்லுநர்கள். எனவே உலகில் முதன்முதல் கணிப்பொறியில் தமிழ் நூல் அச்சிடும் நுட்பத்தைக் கண்டுபிடித்தனர்; வெற்றியுடன் செயல்படுத்தினர்.

அம்மக்களுள் ஒருவர் கனடாவில் அச்சுக்கூடம் நிறுவியும் பதிப்புப்பணியில் ஈடுபட்டும் புகழ்பெற்றவர். இன்னொரு மகனார் இதயராச் அவர்கள் புகழ்பெற்ற திரைப்பட இயக்குனராகவும், நடிகராகவும் புகழ்பெற்றவர். ஈழத்துப்பூராடனார் பல்வேறு நூல்களை எழுதியதுடன் அந்நூல்கள் யாவும் இன்று கிடைக்காமையை உணர்ந்து ஒவ்வொரு நூல்பற்றிய விபரங்களை அறிவிக்கும் அமைப்பில் நானும் எந்தன் நூல்களும் எனும் பெயரில் மூன்று தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இந்நூல்கள் பதிப்புத்துறை சார்ந்தும், தமிழக, ஈழத்து, கனடா சார்ந்த பல்வேறு தகவல்களைத் தருகின்றன. இவ்வாறு காலந்தோறும் நூல்களை ஈழத்துப்பூராடனார் வெளியிட்டாலும் இந்நூல்கள் செம்பதிப்பாகத் தமிழ் உலகிற்குக் கிடைக்கவேண்டும் என்பது நம் எதிர்பார்ப்பு.

தமிழ்மொழி செம்மொழித்தகுதி பெற்றுள்ள இன்றைய நாளில் நடுவன் அரசும் தமிழக அரசும் விருதுகளை அறிவிக்கும் பொழுதும், அயல் நாட்டில் தமிழ்ச் சேவை புரிந்தவர்களை அடையாளம் காணும் பொழுதும் ஈழத்துப்பூராடனார் போன்ற ஆக்கப் பணி புரிந்தவர்களின் பெயர்களை முதலில் நினைவில் கொள்ளவேண்டும்.

பாலர்களுக்கான ஆடிப்பாடும் பாடல்கள். பாலர் பாச்சரம் முதலிய பாடத்தொகுதிகளையும், கால கட்டம் சிந்தனைச்சரம், வெற்றிலை முதலிய கவிதைத்தொகுதிகளையும் படைத்த இவர் வரைதற் கலை சம்பந்தமான வரைவது எப்படி? என்ற தொடர்களையும் வரைதல் கற்பித்தல் நூற்றொகுதிகளையும் படைத்தளித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பொறி மூலம் தமிழ் அச்சமைப்புச் செய்த முன்னோடிகளான இதயம் சகோதரர்களும், சிறப்பாக இதை நெறிப்படுத்திய பொறியியற் கலாநிதி உவெஸ்லி இதய ஜீவகருணா என்பவர்களின் தந்தை யாக இருந்து அந்த முதன் முயற்சியை ஊக்கு வித்தது மட்டுமல்ல, அவற்றைப்பற்றி அறு ஆய்வு நூல்களை எழுதியதுடன் இப்போதும் தமிழ் எழுத்து வடிவங்களை மின்னியல், இலத்திரனியல் நுட்பகணிப் பொறி யுகத்திற்கேற்றதாக வடிவமைக்கும் முயற்சியில் முயன்று வருகிறார். தமிழ்த் திரைப்பட வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட எல்லா விசையங்களையும் தேடித்திரட்டி ஒவ்வொன்றும் 300 பக்கங்களைக்கொண்ட 60 தொகு திகள் கொண்ட தமிழ்த் திரைப்படக் களஞ்சியத் தொகுதியைத் தம்மக்கள் இதயராசு, இதயச்சந்திரா என்பவர்களைக்கொண்டு படைத்து வெளியிட் டுள்ளார்.

இடைக்கிடை சுகங் குறைந்த நிலையில் வைத்தியசாலையில் தங்கி சுகம்பெற்று இல்லம் திரும்பியதும் தமது படைப்புப் பணியைத் தொடங் கிவிடும் இயல்புடைய இவர் 2007ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் கனடாவின் குளிர்காலம், வசந்த காலம், கோடைக்காலம், இலையுதிர் காலமாகிய நான்கு பருவ காலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நூல் என்ற முறையில் கிடைத்தற்கரிய பல அரிய தமிழ் இலக்கிய நூல்களை நூலாய்வு செய்து படைத்து வருகிறார். அவ்வகையில் இதுவரை 1.பாரத சக்தி மகா காவியம், 2.கல்லாடம், 3.நைடதம், 4.சீவக சிந்தாமணி, 5.பெருங்கதை, 6.ஐங்குறுநூறு எனும் இலக்கிய நூலாய்வுகளை வெளியிட்டுள்ளார். அத்துடன் இயற்கை அறிவியல் இலக்கியங்களின் வரிசையில் கடல்கோள் ஓவியம் என்ற நூலையுந் தந்துள்ளார். மக்களுள் ஒருவர் கனடாவில் தமிழ் அச்சுக்கூடம் நிறுவியும் பதிப்புப் பணியில் ஈடுபட்டும் புகழ் பெற்றவர். இன்னொரு மகனார் இதயராசு அவர்கள் புகழ் பெற்ற திரைப்பட இயக்குனராகவும், நடிகராகவும் புகழ் பெற்றவர். இரண்டாவது மகன் இதயஜீவகருணா கணிப் பொறியில் தமிழ் எழுத்து வடிவங்களை அமைத்து முதன் முதலில் தமிழ் அமைப்புச்செய்த பொறியியற் கலாநிதி. நான்காவது மகன் எட்வெட் இதயச்சந்திரா கணிப்பொறி தமிழ் அச்சமைப்பில் வெளியான முதல் இதழான நிழல் எனும் மாசிகையின் ஆசிரியர். இதைவிட தற்போது கனடாவில் இயங்கும் தாப னங்கள், ஊடகங்கள் என்பனவற்றைத் தொடங்கி வைத்தவராக இன்றும் பலரால் நினைவு கூரும் பெருமைக்கு உரியவராக ஈழத்துப்பூராடனார் நிலை பெற்றுள்ளார்.

## கடுகுக் கதை 15

## வல்லவனுக்கு வல்லவன்

தனது தகப்பனார் பீற்றர் குடிப்பழக்கத்தை விட்டதையிட்டு மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனான் அன்ரன். இது உண்மையில் அற்புதம்தான். கடந்த இருபது வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவமொன்று அவனுக்கு ஞாபகம் வந்தது.

பீற்றர் ஒவ்வொரு நாளும் நிறையக் குடிப்பார். பணச் செலவு, அவமானம் என்பனவற்றால் அவதிப்பட்டார்கள் அவரின் ஐந்து ஆண்பிள்ளைகளும். கதைத்துப் பார்த்தார்கள், சொல்லிப் பார்த்தார்கள், கெஞ்சிப் பார்த்தார்கள், எதுவும் சரிப்பட்டு வரவில்லை. பங்குத் தந்தை மூலம் அணுகிப் பார்த்தார்கள். கடைசியில் பீற்றர் பூசைக்குப் போகாமல் நின்றதுதான் மிச்சம்.

பாடசாலை மாணவர்களான ஐவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். தகப்பனிடம் சென்றார்கள்.

"அப்பா! நீங்கள் குடித்தால் இனி நாங்களும் குடிப்பம்....." இறுதி அஸ்திரம் பாய்ந்துவிட்டது.

பீற்றர் எல்லாப் பிள்ளைகளையும்



கண்கலங்கப் பார்த்தார். கட்டிப் பிடித்து உச்சிமோந்தார். பின்பு சொன்னார்

"மக்களே நீங்களும் குடியுங்கடா... அப்பத்தான் மிச்சத்த நானும் குடிக்கலாம்...."

பிள்ளைகள் காணாமல் போனார்கள்.


**- பற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாய நியதிகள்

கவிஞர் நிலாதமிழின்தாசன்



காலைக் கதிர் பட்டுப்
பனி மூடிய புல்நுனி
பளபளவென ஜொலித்தது
காலா காலமாய்
மக்களுடன்
மணிமுடி சூடிய மன்னர்களும்
மாண்டு புதைந்த மண்ணின்மேல்
தான் பூத்து நிற்பதை நினைத்ததோ?
புல் பூரித்துச் சிரித்து
சிலிர்த்து நின்றது.
பரந்த வெளி...
பச்சைப் பசேலென்ற பரப்பு
பனித்துளி முத்துக்களின் முறுவல்
கதிரொளியின் வர்ணஜாலத்தில்
தங்கம், வைரம், மரகதங்களின் ஜொலிப்பு
கண்கொள்ளாக் காட்சி...
இயற்கை எழிலுக்குச் சாட்சி
தேன் தேடியலைந்த பூங்குருவி
நுனிப் புல்லின்
பனிக் கலயத்தில்தாகம் தீர்த்தது
வண்டுகள் பூச்செண்டுகளை நாடிப் போயின அவ்வழி
நிலமகள்
இப்பசுரிப் பசும்போர்வை போர்த்து
அப்பப்பா...!
அழகியிலும் அழகியாய்
மிளிர்வது கண்டேன்
விழிகள் குளிர்ந்தன
மனசுங்கூட மகிழ்வில் குளித்தது...
ஆ! அதென்னது... அட !
கறுப்புக் கறுப்பாய்
சேறு பூசிய மேனிகளாய்
கூட்டங் கூட்டமாய்க்
காட்டெருமைகள் ! ! !
வெறித்த விழிகளுடன்
குறித்த பரப்பினில் குனிந்த குனியாய்
மேய்ந்து வந்தன
நான் –
ரசித்த அழகினைப்
புசித்த எருமைகள்
புசித்து மகிழ்ந்தன
மிதித்து நசித்தன, ஐயகோ !
நியதிகள் யாவும்
நீதி தானா..?
நெஞ்சு கனத்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






*இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' ஓய்வு பெற்ற தொழிலாளியான திரு. கே. இரத்தின சிங்கம் அவர்களைச் சந்தித்தோம். அவர் 1943 - 1962 காலப் பகுதியில் பிரித்தானிய கடற்படையின் கீழ் திருகோணமலைத் துறைமுகத்தில் கப்பல்களுக்கான எண்ணெய் வினியோகப் பகுதியின் 'போர்மன்' ஆகப் பணியாற்றியவர். 1925ம் ஆண்டு பிறந்தவர். தற்போது தனது எண்பத்து நான்கு வயதிலும் மட்டக்களப்பு நகரிலிருந்து செங்கலடி போன்ற நகரங்களுக்கு துவிச்சக்கர மிதிவண்டியில்தான் பயணம் செய்கின்றார். கல்முனையில் பிறந்து திருகோணமலையில் வாழ்ந்து மட்டக்களப்பில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் ஓய்வு காலத்தை கடத்தி வருபவர். இவரைச் சூழவுள்ளவர்களை எப்பொழுதும் கலகலப்பாக வைத்திருப்பது இவரின் கெட்டித்தனம். மே மாதம் முதலாம் திகதி உலகத் தொழிலாளர் தினம். அதனால் இவரைப் பேட்டி காண்பது சிறப்பாக இருக்கும் என எண்ணுகின்றோம்.*

**வணக்கம்! தொண்டனின் சில நிமிடங்களுக்காக உங்களைச் சந்தித்து உரையாட வந்துள்ளோம்.**

வணக்கம்! வாருங்கள் (தனது பொக்கை வாயால் சிரிக்கின்றார்)

**நீங்கள் 1943 – 1962ம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலைத் துறைமுகத்தில் பணி யாற்றியதாகக் கேள்விப்பட்டோம். அதுபற்றிச் சொல்ல முடியுமா?**

திருகோணமலை துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கு எண்ணெய் வினியோகம் செய்வதும் சீனன்குடாப் பகுதியில் உள்ள பாரிய எண்ணெய்த் தாங்கிகளில் எண்ணெய் சேகரித்து வைப்பதும் எமது முக்கிய பணிகளாகும்.

**கப்பல்களுக்கு எண்ணெய் என்று குறிப்பிடுவது 'டீசலை'யா.?**

இல்லை, 'டீசலை' வடிகட்டிய பின் வரும் எண்ணெய்தான் அக்காலகட்டத்தில் பாவனையில் அதிகமாக இருந்தது.

**எண்ணெயினை எங்கு சேகரித்து வைப்பீர்கள்?**

நான் ஏற்கனவே சொன்ன எண்ணெய் தாங்கிலில்தான். சுமார் 60 அடி விட்டமும் 45 அடி உயரமும் கொண்ட 102 தாங்கிகள் இருந்தன. அவற்றில் நூறு பாவனையில் ஈடுபடுத்தப்பட்டன. ஏனையவை ஜப்பான் போட்ட குண்டுகளில் சேதமாகின. ஒவ்வொரு தாங்கியின் தடிப்பும் ஓர் அங்குலம். தாங்கியில் ஓர் அங்குல உயரமுள்ள எண்ணெயின் நிறை 28 தொன்கள். குளிர் காலத்தில் 30 தொன்கள் - அவை சற்று உறைவதனால்.

**அப்படியானால் ஒரு கப்பலில் வரும் எண்ணெயை எத்தனை தாங்கிகளில் நிரப்புவீர்கள்?**

(சிரிக்கின்றார்...) இரண்டு கப்பல்களில் வரும் எண்ணெயானது ஒரு தாங்கியில் கொள்ளப்படும்.

**எண்ணெயினை எடுத்தவுடன் கப்பல் மேலெழுமே..?**

ஆம்! கப்பல்கள் எழும்பிவிடும். உடனே எண்ணெய் கொண்டுவந்த தாங்கிகளில் கடல்நீரை நிரப்பி விடுவோம். பின்னர் கப்பல் சமநிலைக்கு வந்துவிடும்.

**எல்லாக் கப்பல்களும் துறைமுகத்துக்குள் வருமா?**

சிலவகைக் கப்பல் துறைமுகத்துக்குள் வரா. இத்தனைக்கும் திருகோணமலைத் துறைமுகம் பென்னம் பெரிய துறைமுகம். குறிப்பாக விமானந் தாங்கிக் கப்பல்கள் வெளியேதான் நிற்கும். அவ்வேளையில் அவ்விமானங்களுக்கும் 'கேஸ்லைன்' என்ற எளிதில் பற்றக்கூடிய எரிபொருளை விநியோகிக்க வேண்டி வரும். அவ்வெரிபொருட்களை ஒரு சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலில் ஏற்றிக்கொண்டு இதனைக் 'கேபிளால்' இணைத்து இழுவைப் படகினால் இழுத்துக்கொண்டு செல்வோம். எப்பொழுதும் ஒருவர் கோடரியுடன் தயாராக நிற்பார். இழுவைப் படகோ அல்லது எண்ணெய் விநியோகிக்கும் சிறு கப்பலோ விபத்துக்குள்ளானால் 'கேபிளை' வெட்டி விடுவோம்.

**எப்படி விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவீர்கள்?**

விமானம் தாங்கிக் கப்பலில் ஏராளமான விமானங்கள் நிற்கும். நாங்கள் கை ஒலிபெருக்கி மூலம் வருகையை அறிவிப்போம். கப்பலைச் சுற்றி சுவரில் இலக்கங்கள் இடப்பட்டிருக்கும். அவர்கள் குறிப்பிடும் இலக்கங்களில் சிறு கப்பலினை நிறுத்தி எரிபொருள் விநியோகம் செய்வோம். சுமார் 28 பேர் இதற்காகச் செல்வோம். சிலவேளையில் விமானம் தாங்கிக் கப்பலில் இருந்து மலகூடக் கழிவுகள் எமது சிறு கப்பலில் விழும். அதனை வெள்ளைக்காரப் பொறியியலாளர்களே நீரடித்துச் சுத்தம் செய்துவிடுவார்கள்.

எம்மைப் பெரிய கப்பலின் அடிப்பாகத்திற்குக் கூட்டிச் சென்று 2'X2' தட்டுகளில் (ஆளுக்கொரு தட்டு) உணவு தருவார்கள். இரண்டு துண்டு பாண் மட்டும்தான் இருக்கும். மீதியெல்லாம் முட்டையும் கறிவகைகளும். இந்தியக் கப்பல்களில் மார்பிள் கற்கள் பதிக்கப்பட்ட பெரிய அடித்தள அறை இருக்கும். அதில் சோறு குவித்து வைக்கப்பட்டிருக்கும். தொட்டிகளில் கறிகள் வைக்கப்பட்டிருக்கும்.

மதுபான வகைகளும் இருக்கும். 'சிகரட்' புகைப்பதென்றால் அதற்கென்றுள்ள அறையில் புகைக்க முடியும்.

எங்கள் சிறு கப்பலில் நிறைய சிறு சிறு அறைகள் இருக்கும். அதற்குள்தான் எரிபொருள் வைக்கப்பட்டிருக்கும். ஓர் அறையிலிருந்து எரிபொருள் எடுக்கப்பட்டதும் கப்பல் மறுபுறம் சரியும். உடனே மறு அந்தத்தில் உள்ள அறையிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டதும் சமநிலை பேணப்படும்.

**சரி! கப்பலில் எண்ணெய் நிரப்பும்போது ஒருவர் விபத்துக்குள்ளாகி விட்டால் நட்ட ஈடு தருவார்களா?**

பெரும்பாலும் விபத்திற்குக் காரணம் சம்மந்தப்பட்டவர்தான் என்று நிரூபித்துவிடுவார்கள். ஒருமுறை எரிபொருள் எனது உடையில் சிதறிவிட்டது. அது அவர்களின் பிழையால்தான் ஏற்பட்டது. எனக்குப் புது உடுப்பு வாங்க 15 ரூபா தந்தார்கள்.

**துறைமுகத்திலிருந்து பாரிய கடற்பரப்பிற்குச் செல்ல வாயிற் கதவுகள் உண்டா?**

ஆம்! கம்பிச் சுருட்களை கடலில் அடியில் போட்டிருப்பார்கள். போகும்போது இருபக்கமும் அதனை இழுத்துவிடுவார்கள். யுத்த காலத்தில் எங்கள் கப்பல் போகும்போதும் வரும்போதும் எதிரிகள் கீழால் வந்துவிடுவார்கள் என்பதற்காக வாயிற் கதவில் கப்பலுக்குக் கீழே சுட்டுக்கொண்டே வருவார்கள்.

**உங்கள் தொழிலில் மறக்க முடியாத சம்பவங்கள் உள்ளனவா?**

கடலில் நிற்கும் ஒவ்வொரு நிமிடமும் அப்படித்தான். ஒருமுறை சிலவகையான பாரந்தூக்கிகளை கொண்டுவந்திருந்தார்கள். அதில் சில திருத்தங்கள் செய்வதற்கு வெள்ளைக்காரப் பொறியியலாளர்கள் முயன்றுகொண்டிருந்தார்கள். அதை அவதானித்துக்கொண்டிருந்த எனக்கு அவர்கள் இலேசான வழிமுறையை விட்டுவிட்டு கஷ்டப்படுவதாகத் தோன்றியது. எனது அபிப்பிராயத்தைச் சொன்னேன். ஆச்சரியப்பட்டு அப்படியே செய்தார்கள். எனக்கு சம்பளத்தில் 5 ரூபா கூட்டினார்கள். அது அப்போது பெரிய காசு.

அண்மையில் நடந்த வேறு சம்பவம் - இந்திய அமைதி காக்கும் படையினர் இங்கு இருந்தபோது அடிக்கடி சுற்றிவளைப்புகள் இடம்பெறும். அதன்போது எனது கடற்படை சிவில் அடையாள அட்டையைக் காட்டுவேன். எனக்கோ எனது பிள்ளைகளுக்கோ எவ்விதப் பிரச்சினைகளும் ஏற்படுவதில்லை. ஒரு நாள் 'மேஜர்' தர அதிகாரியொருவர் என்னிடம் மெதுவாகக் காதுக்குள் கேட்டார் "நீங்கள் இயக்கங்களுக்கும் பயிற்சியளித்ததுண்டா...?" நான் பதறியடித்துக்கொண்டு "ஐயையோ நான் படையைச் சேர்ந்தவனல்ல... சிவில் அதிகாரி.." என்று சொன்னேன். அதற்குப் பின் அவ்வடையாள அட்டையைக் காட்டுவதேயில்லை.

**நீங்கள் வேறு எங்கு பணியாற்றினீர்கள்?**


காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலும், கந்தளாய் சீனித் தொழிற்சாலையிலும் இயந்திரவியல் பொறிமுறை போர்மனாகப் பணியாற்றியுள்ளேன்.

*தொண்டனின் சார்பில் அந்த 84 வயது 'இளைஞனுக்கு' நன்றி சொல்லி விடைபெற்றோம்.*

**- ஆழியோன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருச்சபை அமைப்புப் பெறல்

இறைவன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னராக நம் மூதாதையருக்கு வாக்களித்து, தம் இறைவாக்கினர் வழியாக முன்னறிவித்து வந்த மீட்பை காலம் நிறைவுற்றபோது செயல்படுத்தச் சித்தங்கொண்டார். அதற்கேற்ப தம் ஒரே மகனையே இவ்வுலகிற்கு அனுப்பினார். இவ்வுலகிற்கு வந்த கிறிஸ்து இறைதந்தையை மக்களுக்கு வெளிப்படுத்த மீட்பின் நற்செய்தியினை அறிவித்தார். அவர்கள் தந்தைக்கு ஏற்புடைய வாழ்க்கையை, வாழும் முறையைப் போதித்தும் வாழ்ந்தும் காட்டினார். தம் பாடுகள், மரணம் வழியாக மனுக்குலத்தை மீண்டும் தந்தையுடன் ஒப்புரவாக்கினார். தம் திருச்சபையினைத் தொடர்ந்து கொண்டுசெல்ல சீடர்களை ஒரு சமூகமாகவும் ஏற்படுத்தினார். அவர்களுக்குத் தலைவராய்ப் பேதுருவை ஏற்படுத்தினார். தாம் பெற்றுக் கொடுத்த மீட்பினைக் கொண்டுசெல்ல அவர்களைப் பயிற்றுவித்தார். தம் தந்தை தம்மை அனுப்பியது போல் அவர்களையும் பணிக்கு அனுப்பி வைத்தார். தூய ஆவியானவரை அவர்களுக்குத் துணையாகக் கொடுத்தார். தம் பணியினை முடித்துக்கொண்ட கிறிஸ்து மீண்டும் விண்ணகம் சென்றார். இவ்வாறு கிறிஸ்துவால் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப் பட்டதே திருச்சபை.

மேலும், அப்போஸ்தலர்களை அடியத்திவாரமாகக் கொண்டும் சீடர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் கிறிஸ்துவால் தாபிக்கப்பட்ட திருச்சபையானது பரிசுத்த ஆவியின் வருகையுடன் மேலும் செயலூக்கம் பெறத் தொடங்கியது. இயேசுவின் மரணத்தின் பின் பயத்தினால் ஒளித்திருந்த சீடர்கள் பரிசுத்த ஆவியினால் பெந்தக்கோஸ்து நிகழ்வில் நிரப்பப்பட்டதும் மேலும் பலம் கொண்டனர். அறிவீனமும் கோழைத்தனமும் கொண்டிருந்த சீடர்கள், ஆவியானவர் இறங்கியது முதற்கொண்டு ஞானமும் வலிமையும் பெற்றவர்களாய்ச் செயற்படத் தொடங்கினர்.

வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்து அப்போது ஜெருசலேமில் கூடியிருந்த பல யூதர்கள் முன்னிலையில் அவர்கள் பன்மொழிகள் பேசத் தொடங்கினர். அப்போஸ்தலர்கள் குழுவின் தலைவராய் ஏற்படுத்தப்பட்ட பேதுருவே ஏனைய சீடர்களின் பிரதிநிதியாக அவர்கள் முன் எழுந்து முதலாவது உரையினை ஆற்றினார். அவருடைய உரையிலே, கடவுள் அவரை அனுப்பினார், நீங்கள் அவரைக் கொன்றீர்கள், கடவுள் அவரை உயிர்ப்பித்தார், நாங்கள் அதற்குச் சாட்சிகள் எனும் சாராம்சத்தைச் சுருக்கமாய்க் காணக்கூடியதாய் இருந்தது. இவ்வுரையினால் உள்ளம் குத்துண்ட மக்கள் மனமாற்றம் அடைந்தனர், திருமுழுக்குப் பெற்றனர். 3000 பேர் திருச்சபையில் அன்றைய தினமே சேர்ந்தனர். இதனால் இத்தினமே திருச்சபையின் பிறந்த தினமாக அமைந்தது.

மேலும், ஒரு நாளில் சீடர்கள் பேதுருவும் யோவானும் ஜெருசலேம் தேவாலயத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது 'அழகு வாயில்' அருகில் பிச்சை கேட்டுக்கொண்டிருந்த பிறவி முடவனைக் கண்டனர். பேதுரு அவனிடம் "வெள்ளியோ பொன்னோ என்னிடம் இல்லை. என்னிடம் உள்ளதை உனக்குக் கொடுக்கிறேன். நசரேயனாகிய இயேசுவின் பெயரால் எழுந்து நட" எனக் கூறி குணமாக்கினார். இச்சம்பவத்தின் பின் திரண்டு வந்த மக்கள் கூட்டத்தினருக்கு சாலமோன் மண்டபத்தில் வைத்து பேதுரு இரண்டாவது உரையாற்றினார். இதன் பலனாக ஐயாயிரம் ஆண்கள் உட்பட பலர் மனமாற்றம் அடைந்தனர், திருமுழுக்குப் பெற்றனர், திருச்சபையில் சேர்ந்தனர். இவர்களுடன் சேர்ந்து ஏனைய அப்போஸ்தலர்களும் சீடர்களும் சேர்ந்து ஒரு சமூகமாக வாழ்ந்தனர்.

ஆதித் திருச்சபையின் வாழ்க்கை முறை அனைவரையும் கவரக் கூடியதாய் இருந்தது. அவர்கள் அப்போஸ்தலர்களின் போதனையைக் கேட்பதிலும் நட்புடன் உறவாடுவதிலும் அப்பம் பிட்குதலிலும் இறைவேண்டலிலும் நிலைத்திருந்தனர். ஏற்றத் தாழ்வுகள் அவர்களிடம் இருக்கவில்லை. ஏழை, பணக்காரன் பேதங்கள் இருக்கவில்லை; பகிர்ந்தளித்தனர். எவ்வித பாரபட்சமும் காட்டவில்லை. மக்களின் நன்மதிப்புப் பெற்றுக் கவர்ச்சியுடையதாய் இருந்தது. இவ்வாறு பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ் படிப்படியாக வளர்ச்சியடைந்து அமைப்புப் பெற்ற நல்ல திருச்சபையாக விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோமரும் கலையும்



இந்த ஆய்வுக் கட்டுரை நீண்டுவிடும் என்ற காரணத்தினால் உரோமரின் கலைவாழ்வு பற்றி விஸ்தாரமாக வருணிக்க வில்லை.

கி.மு 63 கி.பி 1453 கொன்ஸ்தாந்து நோபிள் வீழ்ச்சி (lastanbul) வரை ஆட்சி செய்த உரோமர்கள் பல முதிசங் களை உலகுக்கு விட்டுச் சென்றுள்ளனர்.

பிரதானமாக இன்றைய மாத நாட்காட்டி (Calender), July, August மாதங்கள் 31 நாட்களைக் குறிக் கின்றன. இவை யூலியஸ் சீசரினாலும், அகஸ்துஸ் சீசரினாலும் 31 நாட்களாகக் கூட்டப்பட்டன. February மாதம் 28 நாட்களாகக் குறைக்கப்பட்டது. மொத்த வருட எண்ணிக்கையில் மாற்றமில்லாத வகையில் இம்மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. எனவே அவர்களது வரலாற்றுப் பெருமை மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றுகூட இலங்கையில் உரோமர் இடச்சுச் சட்டங்கள், கண்டிய சட்டங்களோடும் யாழ்ப்பாண தேச வழமைச் சட்டங் களோடும் ஒன்றுகூடி நிற்கின்றன. இவற்றுக்குச் சட்ட வல்லு னர்கள் சான்று கூறுகின்றனர். உரோமர்களின் கலைக்கு எடுத்துக் காட்டாக உரோமபுரி வத்திக்கானில் அமைந்துள்ள உலகிலேயே மிகப் பெரிய தேவாலயமும் அதனை நிருமாணித்த தலை சிறந்த கலைஞன் மைக்கல் ஆஞ்சலோவையும் அறியாதவர் யாவர்? இது கலை வாழ்வு.

மைக்கல் ஆஞ்சலோவின் உலகப் பிரசித்தி பெற்ற பியட்டா (Pieta) எனப்படும் அன்னை மேரி, இயேசுவின் இறந்த உடலைத் தாங்கி

## கலைவாழ்வு

நிற்கும் பளிங்கினால் செதுக்கப்பட்ட சிலை மிக அற்புதமானது, அதிசயமானது.

லியனாடோ டாவின்சியின் அற்புதமான கலை ஓவியங்கள், சிற்பங்கள் இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் நிலைகொண்டு, பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பயணிகளையும் கலை வாணர்களையும் ஈர்க்கின்றது.



பண்டைய உரோமர்களின் விளையாட்டரங்கு கொலோசியம் (Coloseum) என்ற விளையாட்டுத் திடல் பார்ப்போரை பிரமிக்கச் செய்கிறது.

ஐரோப்பா எங்கனுமுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் உரோமர்களின் கலை வாழ் வுக்குச் சான்று பகருகின்றன.

கிரேக்கர்கள் உரோம ஆட்சிக்கு முந்தியவர்கள். இவர்களது ஆட்சி பல்வேறு கலைகளுக்கு முதன்மையளித்ததோடு விளையாட்டை ஒரு தலையாயக் கலை யாகக் கொண்டிருந்தது (ஒலிம்பிக்ஸ்).

## கலையும் வாழ்வும் - பாரத நாடு

இந்தியா பரந்த நாடு. ரஷ்யா நீங்கலாக ஐரோப்பாவின் மொத்த நிலப்பரப்பிற்கு இந்திய நாட்டின் பரப்பளவு சமனாகும். நில அமைப்பு வடபகுதி நீண்ட மலைத் தொடரால் சூழப்பட்டுள்ளது. தெற்கிலும் கிழக்கிலும் கடலால் சூழப்பட்ட தீபகற்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வனப்புமிக்க வடபகுதி மலைகள் புனிதமானது என இலக்கியங்கள் கூறுகின்றன. மேலும் வடஇந்தியச் சமவெளி, அங்கு நீரைப் பாய்ச்சும் சிந்து நதி 20,000 அடி உயரமான மலையில் உற்பத்தியாகி கிழக்கிலே வங்காள விரிகுடாவுடன் சங்கமிக்கின்றது. சிறு முயற்சிக்கும் பெரும் பலன் தரவல்ல நிலப்பரப்புகளாகும். இதனால் மக்களின் ஓய்வுநேரம் மிக அதிகமாக இருந்தது.

தம் ஓய்வு நேரங்களைக் கலைகளில் செலுத்தினர். அவர்களது கலைவாழ்வு சிறந்தது. இந்தியாவில் பல்வேறு பீடபூமிகளும் அமைந்துள்ளன. மத்திய பீடபூமி, பாலைவனங்கள், கடற்கரைச் சமவெளி ஆகிய நிலப்பரப்புகள் அந்த நிலங்களுக்கேயுரிய கலைகளை வளர்க்கச் செய்தன.

பண்டைய வேதங்களிலும் அக்கால வரலாறுகளை அறியமுடிகிறது. ஆலாலசுந்தரம் இந்திய வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார்கள். வேதங்களுக்கு அடுத்தபடியாக இராமாயணம், மகாபாரதம் என்பவை பண்டைய மக்களின் போர் முதலான கலைகளையும், தர்மங்களையும் பிற கலைகள் பற்றியும் அறிய உதவுகின்றன.

பௌத்த, சமண இலக்கியங்களும் அக்காலக் கதைகள் பற்றித் தெளிவுபடுத்துகின்றன. கதைகள் கூட ஒரு கலையாகவே பண்டைய நாளிலிருந்து பயன்பட்டு வருகின்றன. பௌத்த ஜாதகக் கதைகள் சுமார் 550 கதைகள் அக்கால சமுதாயம் மற்றும் கலைகள் பற்றிக் கூறுகின்றன.

இவை அக்காலக் கலைகள் பற்றி - கி.மு. 3ம் நூற்றாண்டின் நாகரீகக் கலைகள் பற்றி அறியப் பெரிதும் பயன்படுகின்றன. கௌடில்யரது அர்த்த சாஸ்திரம் அரசியல் ககைள் பற்றி விவரிக்கின்றது. சந்திரகுப்த மௌரியர் ஆட்சி புரியும் விதத்தை நாடகமாக விளக்குகின்றது. மேலும், அர்த்தசாஸ்திரம் ஆதிகாலக் கலைகள் பற்றி விளக்குகின்றது. காளிதாசரின் இலக்கியம் அக்காலக் கலை, கலாசாரம், சமுதாயம் பற்றிக் கூறுகின்றது.

சந்திரகுப்தருடைய படையெடுப்புகள் பற்றியும், படைத்தலைவர்களுக்குள் ஒருவரான ஹரிசேன கவிஞர் எழுதிய பாமாலையொன்று அலகாபாத் கோட்டையில் தூண் ஒன்றில் செதுக்கப்பட்டதாக அறிஞர்கள் கூறுவர். அரசர்களைப் பற்றிய ஏராளமான நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன.

முகமதீய நூலாசிரியர் குறிப்பாக பிர்தௌசி, ஹல்பெருணி, உத்பி ஆகியோர் தம் அரசரை மிக கலை நயத்தோடு வர்ணிக்கிறார்கள்.

**- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -**

---

# இன்றின் பதிவு

– B. பிலோமினா –

இரும்பு வலைக்குள்
இன்றுகளின் பதிவு
எதிர்வு கூறல்கள்
இதயத்தின் மேலெழுந்து
கண்களுக்குள் வழிகிறது

வீட்டு வாசலில்
சமாதான யாசகமா?
இல்லாததைக் கேட்டதற்கா
இப்படியொரு முறைப்பு?

ஐஸ்கிறீம் காரனின்
அவசர அழைப்பு
தூரமாய்ப் போனதால்
துக்கம் உன் விழிகளில்
தொத்திக் கொண்டதா?

இறுகப் பற்றிய
இரும்புப் பின்னல்
இருப்புக்கு உதவுவதாய்
இந்தச் சிட்டுக் குருவிக்கும்
சின்னதாய் நம்பிக்கை...

காலத்தின் கிறுக்கல்கள்
கண்களில் நெளிகிறது
உன்னுள்ளுறைந்த மௌனம்
மரணிக்கும் மனிதத்தின்
முகவரி சொல்கிறது.

துக்கம் சுமந்து வந்த
தூண்டில் விழிகள்
விதிர்ப்பு வாழ்க்கையின்
விலாசம் சொல்கிறது
உன் விலகலையும் சொல்கிறது

நீ தேக்கிய வார்த்தைகள்
விழுந்து விடுவதற்குள்
விரைந்து விடு
உன்னிதய விம்மல்கள் வெடித்து
இமைவழி வழிவதற்குள் விரைந்திடு

எங்கேயும் அன்பும் அமைதியும்
அரசிருக்கையில் வீற்றிருந்தால்
அங்கு விரைந்து விடு
ஆனந்தம் அரங்கேற்று அடுத்து
எனக்குமோர் அழைப்பு விடு

எச்சிலாய்
இவ்வாழ்வை உமிழ்ந்துவிட்டு
அங்கு ஓடோடி வருகின்றேன்
ஒருவருக்கும்
உன் விலாசம் சொல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் மட்டுநகர் முத்தழகு



- சிறந்த பேச்சாளர், கவிஞர், கட்டுரையாளர், நாடக நடிகர், சிறுகதை எழுத்தாளர், சமூக சேவையாளர், சித்த வைத்தியர்.

- மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலய பணித்தளப் பேரவையில் 3ம் வட்டாரப் பிரதிநிதியாக இருந்தவர்.

- "தாகமாய் இருக்கிறேன்" சிறுகதைத் தொகுதி இரு பதிப்புகள் வெளியீட்டின் மூலம் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மைச் சம்பவங்களைத் துணிந்து வெளியிட்டவர். அத்துடன் பத்திரிகைகளிலும் சிறுகதையாக வெளியிட்டவர்.

- கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் பலசமயங்கள் பற்றிய அறிவு இவரிடம் காணப்பட்டது இவரின் தனிச்சிறப்பு.

- உலக கவிஞர்கள் மகாநாடு இந்தியாவின் தமிழ்நாட்டில் நடைபெற்றபோது 'தமிழ் அருவி' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

- இலங்கை கலாசர அலுவல்கள் திணைக்களம் இவருக்கு "கலாபூசணம்" வருது வழங்கிக் கௌரவித்தது.

- மட்டக்களப்பு மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை கவிதைத்துறைக்கு ஆற்றிய பணிக்காக இவருக்கு விருது வழங்கிக் கௌரவித்தது.

- மட்டக்களப்புக் கலாபம் கலைமன்றத்தின் ஆலோசகராக இருந்து மன்றத்தின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவிய இவர் கடந்த 17.03.2009 அன்று இறைவனடி சேர்ந்தார்.

பல்வேறு திறமைகளைக் கொண்ட அன்னாரின் மறைவு எமது மன்றத்துக்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காகச் செபிக்கிறோம்.

**– செயலாளர் –**
**கலாபம் கலை மன்றம், மட்டக்களப்பு**



## காட்சியும் கவிதையும் 04

இந்தப் படத்தைப் பார்க்கும்போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை இருவரிக் கவிதையாக எழுதி அனுப்புங்கள். தெரிவு செய்யப்படும் கவிதைகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.



செல்வி. நிரோஷா
எல்லை வீதி
மட்டக்களப்பு

## காட்சியும் கவிதையும் 03

### பாராட்டுப் பெறும் கவிதை

சேவையை அணியாய் அணிந்த அன்னை - கையில்
சேயினை ஏந்திக் கனிந்து நின்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## மே, ஜூன் - 2009

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.50 மணி**

**நாள்:** 23, 24, 25, 26 – அருள்தந்தை. பிரைனர் செலர்
27, 28, 29 – அருள்சகோ. செபமாலை செல்வநாயகம்
06, 07, 08, 09 – திரு. லூக்காஸ் அலெக்ஸாண்டர்
10, 11, 12 – திருமதி. புவனேஸ்வரி அகஸ்டின்

**சிறுவர் உலகம் – மாலை 5.15 மணி**

**நாள்:-** மே 19, ஜூன் 02, 16

கதையும் கருத்தும், கவிதை, குறுங்கதை, கட்டுரை, பாடல்கள் இன்னும்...

**புதிய உலகம் – மாலை 4.30 மணி**

**நாள்:-** மே 31, ஜூன் 14

வழிபாடு, திருச்சபைச் செய்திகள், நாடகம், சிந்தனை உரை, பாடல்கள் இன்னும்...

நிகழ்ச்சித் தொகுப்பு : மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் – 44,
மட்டக்களப்பு.

## கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளராக அருள்தந்தை நவரெட்ணம்



அருள்தந்தை A.A.நவரெட்ணம் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முழுநேர விரிவுரையாளராக நியமனம் பெற்றுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் கிறீஸ்தவ பாட நெறிக்கான விரிவுரையாளராக நியமனம் பெற்றுள்ள அருள்தந்தை நவரெட்ணம் அவர்கள், ஏற்கனவே மட்/புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராக, உதவி அதிபராக அண்மைக் காலங்களில் பணி புரிந்து வந்தவர்.

எழுத்தாற்றலும், இலக்கிய பரிச்சயமும் கொண்ட அடிகளார் ஈழத்தின் புகழ் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்படும் மூதூர் வ.அ.இராசரெத்தினம் அவர்களின் புதல்வராவார். அடிகளார் கல்வித் துறையில் மேலும் வளர்ந்து சிறக்க வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி 15- 06 - 2009




# விவிலியம் கற்போம் - 76

(எண்ணிக்கை 14:26–44)

(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும் கூறியது: இப்பொல்லாத மக்கள் எதுவரை எனக்கெதிராக முறுமுறுப்பர்? அவற்றை நான் கேட்டேன். நீங்கள் அவர்களிடம் , "............................... கூறுவதாவது: என் உயிர் மேல் ஆணை! என் செவிகளில்படுமாறு நீங்கள் சொன்னதையே நான் உங்களுக்குச் செய்வேன்; இருபது வயதும் அதற்கு மேலும் எண்ணப்பட்ட நீங்கள் இப்பாலைநிலத்தில் .................................. விழுவீர்கள். நீங்கள் குடியிருக்கும்படி நான் வாக்களித்த நாட்டிற்குள் எப்புன்னே மகன் காலேபையும் நூன் மகன் யோசுவாவையும் தவிர ஒருவருமே வரமாட்டீர்கள். ஆனால் இரையாகிவிடப்போவதாக நீங்கள் கருதிய உங்கள் ......................................... நான் கொண்டு சேர்ப்பேன்; நீங்கள் இழிவாக எண்ணின நாட்டை அவர்கள் கண்டறிவார்கள். நாற்பது ஆண்டுகள் உங்கள் பிள்ளைகள் இப் பாலைநிலத்தில் அலைந்து திரிவர்; உங்கள் .............................. துரோகத்திற்காக உங்களுள் கடைசி ஆள் பிணமாக விழும்வரை அவர்கள் துன்புறுவர். நீங்கள் நாட்டை உளவு பார்த்த நாள்களின் எண்ணிக்கைப்படி ஒரு நாளைக்கு ஓர் ஆண்டாக ........................ நாள்களுக்கும் நாற்பது ஆண்டுகள் நீங்கள் குற்றப்பழியைச் சுமப்பீர்கள்; என் வெறுப்பையும் அறிந்துகொள்வீர்கள். இதை நான் கட்டாயம் செய்துமுடிப்பேன்" என்றார். நாட்டை உளவு பார்க்க .......................................... அனுப்பி, பின் திரும்பி வந்து தவறான அறிக்கையால் மக்களை அவருக்கு எதிராக முறுமுறுக்கச் செய்த ஆள்கள் ஆண்டவர் முன்னிலையில் வாதையால் மாண்டனர். ஆயினும் நூன் மகன் ..................................... எப்புன்னே மகன் காலேபும் உயிர் தப்பி வாழ்ந்தனர். மக்கள் மிகவும் அழுது புலம்பினர். அவர்கள் காலையில் எழுந்து, "இதோ நாம் இங்கிருந்து ஆண்டவர் வாக்களித்த இடத்திற்கு ஏறிச் செல்வோம்; நாம் .......................... செய்து விட்டோம்" என்று சொல்லி மலையுச்சிகளை நோக்கிச் சென்றனர். அப்போது மோசே "ஏன் இப்போது ஆண்டவர் கட்டளையை மீறுகிறீர்கள்? அது நடக்கப் போவதில்லை. உங்கள் ..................................... முறியடிக்கப்படாதபடி நீங்கள் ஏறிச் செல்ல வேண்டாம்; ஆண்டவர்தாம் உங்களிடையே இல்லையே! அங்கே அமலேக்கியரும் உங்களை எதிர்க்க இருக்கிறார்கள்; நீங்கள் வாளால் வெட்டி வீழ்த்தப்படுவீர்கள், ஏனெனில் ஆண்டவரைப் பின்பற்றுவதினின்று நீங்கள் விலகிவிட்டீர்கள்" என்றார். ஆனாலும் அவர்கள் ஏறிச் சென்றனர். ஆண்டவரின் ........................................................., மோசேயோ புறப்படவில்லை. அமலேக்கியரும் கானானியரும் வந்து அவர்களை முறியடித்து ஓர்மா மட்டும் துரத்திச் சென்றனர்.

**விடைகள் :** மோசே, எதிரிகளால், உடன்படிக்கைப் பேழையோ, பாவம், யோசுவாவும், குழந்தைகளை, நாற்பது, ஆண்டவர், நம்பிக்கை, பிணங்களாக

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 76

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. உலகில் முதல் பிரமிடு கட்டப்பட்ட ஆண்டு
   (கி.மு. 3000, கி.மு. 2000, கி.மு. 3500)

2. சூரிய வெளிச்சத்தில் ஏழு வண்ணங்கள் இருப்பதை நிரூபித்தவர்
   (ஐசக் நியூட்டன், ஐன்ஸ்டன், சி.வி. இராமன்)

3. குழல்களற்ற சுரப்பிகள் சுரக்கும் திரவம் இவ்வாறு அழைக்கப்படும்
   (ஹோர்மோன், செந்நீர், வியர்வை)

4. ஆடுற மாட்டை ..........................................................
   (ஆடிப் பிடிக்கணும், ஓடிப் பிடிக்கணும், ஆடிக் கறக்கணும்)

5. சிறந்த ஓவியராக விளங்கிய சர்வாதிகாரி
   (முசோலினி, ஹிட்லர், மார்க்கோஸ்)

6. 'பாடாப் பாவை' என்பதில் உள்ள பாடா என்பது
   (பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 76
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
.................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 74 விடைகள்

மோசே, சம்முவா, பென்யமின், அம்மியேல், நூனின், நெகேபினுள், எபிரேபன், பாலும், வலிமை, அரக்கர்

## அறிவை வளர்ப்போம் - 74 விடைகள்

1) புரதம் 2) இலண்டன் 3) ஆயுர்வேதம் 4) நியுசிலாந்து
5) வினையால் அணையும் பெயர் 6) கல்லும் கரையும்

### பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- எஸ். குளோரி மொன்ஷரா
  மட்டக்களப்பு
- ல. லக்ஷிக்கா லக்ஸ்மன்
  திருகோணமலை

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 26 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  அ. றே. சியாமினி
  திருகோணமலை
- **இரண்டாம் பரிசு** - 200/=
  சுவேஸ்ராசா சுவணியா
  முகத்துவாரம்
  மட்டக்களப்பு
- **3ம் பரிசு** - 100/=
  A. சஜித்ரன்
  கிறிஸ்ரி இல்லம்
  தம்பிலுவில் - 1

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NIXON BAKERY

# நிக்ஷன் பேக்கரி

இல - 16A, இருதயபுரம் கிழக்கு, மட்டக்களப்பு

No: 16A, Iruthayapuram East, Batticaloa

**TEL: 065 2225884**

தரமான, சுவையான
பேக்கரி உணவு
வகைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்







- பாண்
- றோஸ் பாண்
- வட்டர் பாண்
- சுத்து வட்டர் பாண்
- சொக்லட் கேக்
- வட்டர் கேக்
- ஸ்பொஞ் கேக்
- ஐசிங் கேக்
- சமன் கறி வனிஸ்
- மரக்கறி வனிஸ்
- முட்டை வனிஸ்
- டீ வனிஸ்
- ஜேம் வனிஸ்
- றோல் வனிஸ்
- மாஜரின் வனிஸ்
- கிறீம் வனிஸ்
- கீல்ஸ் வனிஸ்
- கல் வனிஸ்
- சமன் பேஸ்டி
- மரக்கறி பேஸ்டி
- பீசா
- யானைக்கருத்தான்
- இறைச்சி றொட்டி
- மரக்கறி றொட்டி
- இறைச்சி சம்சா
- முட்டை சம்சா
- மரக்கறி றோல்ஸ்
- கட்லட்
- டோனக்ஸ்



வனசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org